பக்கங்கள் எட்டு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 06 ஞாயிற்றுக்கிழமை (19 - 03 - 2000) VALAMPURI ஒலி: 91

## தற்கொலைத் தாக்குதல் அச்சம் யுவதியின் 'சுரிதாரைக்' களையவைத்தது

(கொழும்பு)

சுரிதார் அணிந்து வந்த யுவதி ஒருவரை கொம்பனித் தெருப் பொலிஸார் தற்கொலைக் குண்டுதாரி என்ற சந்தேகத்தின்பேரில்நடுத்தெருவில் வைத்து சுரிதாரைக் கழற்றுமாறு பணித்த சம்பவம் நேற்று நடந்துள்ளது,

கொம்பனித் தெருவால் சுரிதார் அணிந்த யுவதி ஒருவர் நடந்து வந்துகொண்டிருந்த பொழுது தற்கொலைக் குண்டுதாரி எனச் சந்தேகம் கொண்ட பொலிஸார் அவரை தூரத்தில் நிறுத்தியதோடு சுரிதாரைக் கழற்றுமாறு (8 ஆம் பக்கம் பார்கக்)

★ ஜேர்மன் சிறையில் இருந்தபோது

## வழக்கறிஞருடன் பேசமுடியவில்லை

## தற்கொலை செய்ய தோன்றியது!

### ஜேர்மனில் இருந்து திரும்பிய யாழ் வாலிபர் தகவல்

(கொழும்பு)

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பம் செய்திருந்த என்னை விசாரணைக்கு வருமாறு அழைத்த ஜேர்மன் அரசு வீதியில் வைத்து கைது செய்து என்னைச் சிறையில் வைத்தார்கள் எனது கைது தொடர்பாக வழக்கறிஞருடன் பேச எனக்கு அனுமதி மறுக்கப்பட்டதனால்' தற்கொலை செய்யலாம் போல் தோன்றியது.

இவ்வாறு ஜேர்மனியிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட யாழ்ப்பாணம் வேலணை புளியங்கூடலைச் சேர்ந்த பரதராசா வரதகுமார (வயது 28) [illegible] வலம்புரி செய்தி[illegible] தெரிவித்தார்.

அவர் மேலும் த[illegible] விக்கையில் [illegible] தாவது.

1992ம் ஆண்டு ஜேர்மனி சென்ற [illegible] அரசி[illegible] டம் கோரி [illegible] ஜேர்மன் அரசிற்கு [illegible]ண்ணப்பம் செய்திருந்தே[illegible] எனது விண்ணப்பம் அரசினால் நிராகரிக் (8ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மனியில் தஞ்சம் கோரிய இலங்கையரை

# திருப்பி அனுப்பும் முடிவை

# மீள் பரிசீலனை செய்யவும்!

## தமிழ்க் கட்சிகள் கோரிக்கை

(கொழும்பிலிருந்து எமதுவிசேட நிருபர்)

**ஐயாயிரத்து ஐந்நூறு இலங்கையர்களை திருப்பி அனுப்புவது என்ற முடிவை ஜேர்மன் அரசு மனிதாபிமான முறையில் மறு பரிசிலனை செய்து அம் முடிவை மாற்றவேண்டுமென்று கோரி நான்கு தமிழ் அரசியல்க் கட்சிகள் ஜேர்மன் அரசிடம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளன.**

**தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, புளொட், தமிழீழ விடுதலை இயக்கம் ஆகிய நான்கு கட்சிகளுமே இவ் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளன.**

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்த இலங்கையர்களில் குறிப்பாக தமிழ் அகதிகளின் விண்ணப்பங்களை மனிதாபிமான அடிப்படையில் மீள் பரிசீலணை செய்து அவர்களின் பாதுகாப்புக் கருதி இலங்கைக்கு திருப்பி அனுப்பாது விடுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும் திருமலை மாவட்ட எம்.பியுமான இரா. சம்பந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இனப்பிரச்சினை தீரும் வரையில் அவர்களுக்கு கால அவகாசம் வழங்க வேண்டும் இதனை விடுத்து அவர்களைத் திருப்பி அனுப்பினால் அவர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்,

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் யாழ் மாவட்ட எம். பியுமான டக்ளஸ் தேவானந்தா பேர்ளினிலுள்ள ஜேர்மன் அதிபருக்கு அனுப்பிய அவசர செய்தியில்,

ஈழத்தமிழ் மக்களின் பாதுகாப்பு இலங்கையின் இனப் பிரச்சினை தீராத வரை கேள்விக் குரிய தொன்றாக இருப்பதாலும் அவர்களது உயிருக்கு உத்தரவாதமில்லாததாலும் அரசியல் தஞ்சம் கோரிய எமது மக்களை திருப்பி அனுப்புவதென்ற முடிவை கைவிடுமாறு கேட் (8ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் பொலிஸார் காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி வீதி இலுப்பையடிச் சந்தியில் நேற்றுப் பிற்பகல் காவல்க் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது இனம் தெரியாத துப்பாக்கிதாரிகள் சுட்டதில் பொலிஸார் ஒருவர் காயமடைந்துள்ளார். (8ஆம் பக்கம் பார்க்க)

## பிணையில் செல்ல அனுமதிக்கும் சட்டமூலத்தை மாற்ற அரசு திட்டம்?

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழும், அவசரகாலச் சட்டத்தின் கீழும் கைதுசெய்யப்படுபவர்கள் சட்டமா அதிபரின் அனுமதியுடன் பிணையில் விடுவதற்கு வழி (8ஆம் பக்கம் பார்க்க)

## ஏழாலை மயிலங்காட்டைச் சேர்ந்த நிமலதாஸன் வவுனியாவில் காணவில்லை

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டத்தைச் சேர்ந்த சாந்தகுமார் நிமலதாஸன் (வயது 26) என்பவர் கடந்த 7 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த 7 ஆம் திகதி வவுனியாவிலிருந்து கட்டார் நாட்டுக்குச் செல் (8ஆம் பக்கம் பார்க்க)

## வைத்தீஸ்வரன் தேர்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானின் தேர்த் திருவிழா இன்று காலை நடைபெறும் பஞ்சரதங்களில் தையல்நாயகிசமேதவைதீஸ்வரப் பெருமானும் பரிவாரமூர்த்தங்களும் வீதி உலாவருவர். (ந)

## உள்ளே...

**வடக்குக் கிழக்கு மாகாணத்தில் க. பொ. த' உயர்தரப் புள்ளிகளின் அடிப்படையில்**

**ஆசிரியர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்டோரின்**

பெயர் விபரங்களின் நேற்றைய தொடர்ச்சி உள்ளே பிரசுரமாகியுள்ளது (ஆ-ர்)

## யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியாக கே.பி.எஸ்.வரதராசா சத்தியப்பிரமாணம்

### அடுத்த வாரம் பதவி ஏற்பார்

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக கே. பி. எஸ். வரதராசா பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்னிலையில் 16 ஆம் திகதி வியாழக்கிழமை சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வந்து தனது கட (8 ஆம் பக்கம் பார்க்க)

## உலகவங்கியின் நிதி உதவியுடன் வன்னியில் 6 குளங்கள் திருத்த அனுமதி

### உயர்மட்டக்கூட்டத்தில் முடிவு?

(வவுனியா)

''உலகவங்கியின் நிதி உதவித்திட்டத்தின் கீழ் வன்னிப்பகுதியில் உள்ள ஆறு குளங்கள் தெரிவுசெய்யப்பட்டு திருத்துவதற்காக அனுமதியை இராணுவம் வழங்கியுள்ளதுடன் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு (8ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் பெரும் கிறிக்கெட் மோதல் வெற்றி தோல்வியின்றி முடிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கின் பெரும் மோதல் என வர்ணிக்கப்படும் யாழ். மத்திய கல்லூரியினதும் யாழ். பரியோவான் கல்லூரியினதும் துடுப்பாட்ட அணிகளுக்கிடையிலான 94 ஆவது கிறிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலாவது இனிங்ஸ்சில் பரியோவான் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து (8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## (இராசி பலன்)

19.03.2000
ஞாயிற்றுக்கிழமை
(தமிழுக்கு பங்குனி - 6)

சதுர்த்தசி பகல் 11.04 வரை, பூரம் இரவு 6.17 வரை, சித்தாமிர்தம்' கரி நாள், இராகுகாலம் மாலை 5.20 முதல் 6.50 வரை, சுபநேரம் காலை 9.48 முதல் 11.18வரை பூரணைவிரதம்.

**மேடம்:**
கடுமையானபோக்கு, தன விரயம், மனச்சுமை.

**இடபம்:**
திடீர்நன்மை, சுற்றத்தார் பாராட்டு, திட்டமிடல்.

**மிதுனம்:**
உடலில் தொல்லை, கடின வாக்கு வெறுப்பு.

**கடகம்:**
நண்பர் மனக்கசப்பு, மன வேதனை, அலைச்சல்.

**சிங்கம்:**
காரியசிறப்பு, நன்மையான முயற்சி, தாயார் பாராட்டு.

**கன்னி:**
நரம்புக் கோளாறு, தொழில் மந்தம்,. வருவாய் பாதிப்பு.

**துலாம்:**
நோய்நிவர்த்தி, தெய்வீகப் பணி, மகான் தரிசனம்.

**விருச்சிகம்:**
காரியவெற்றி, புதியதிட்டம், வஸ்திர லாபம்.

**தனுசு:**
கோபவார்த்தை, பழிச்சொல், மனைவி சீற்றம்.

**மகரம்:**
எதிர்பாராத தொல்லை, அதிகாரிகோபம், வேதனை.

**கும்பம்:**
பகைமைநீங்கல், பதவிமாற்றம், சாதனை.

**மீனம்:**
வெற்றிவாய்ப்பு, பண கூனுகூலம், தந்தையார் உதவி

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

## இன்று பாலர் பாடசாலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 16 பாலர் பாடசாலை மாணவர்களின் பேச்சுத் திறன் காணும் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நாவலர் பாலர் சோலையில்இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி கல்விக் கழகத் தலைவர் சிவநேயர் இ. தவகோபால் தலைமை வகிப்பார். யாழ். கோட்டக் கல்வி அதிகாரி திரு. ஆர் இராஜகோபால் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். [சி]

## சாந்தி சஞ்சிகை வெளியீடு

வலிகாமம் கல்வி வலையத்தினால் யாழ்-மாவட்ட பாடசாலைகளில் தற்போது அமுலாக்கம் பெற்று வரும் ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாசார அமைச்சின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சாந்தி என்னும் சிறு சஞ்சிகை வெளியிடப்படவுள்ளது.

இதுயுனெஸ்கோ இரண்டாம்கட்ட ஆதரவுடனான வெளியீடாக ஆசிரியர்கள், மாணவர்களுடைய ஆக்கங்கலள தாங்கி வெளிவந்து உள்ளது. (சி)

## இன்று காளிகாதேவி தேர் உற்சவம்

(புலோலி)

பருத்தித்துறை வியாபாரி மூலை அருள்மிகு பழவத்தை ஸ்ரீகாளிகாதேவி ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 11ம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று தேர்உற்சவமும் 20ம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன. இவ் உற்சவங்களை வல்வெட்டித்துறை முத்துமாரி அம்பாள் ஆலய பிரதம குரு பிரம்ம ஸ்ரீதண்டபாணி தேசிகர் நடாத்தி வருகின்றார். (க-52)

## மயிலை றோ. க. வி. இடமாற்றம்

மானிப்பாய் புனித அந்தோனியார் தேவாலயத்தில் இயங்கி வந்த மயிலிட்டி றோமன் கத்தோலிக்கப்பாடசாலை தற்போது மானிப்பாயிலுள்ள லயன் எஸ். பத்மநாதனின் சக்தி இல்லத்தில் நடைபெற்று வருகிற .

இப்பாடசாலையின் கல்விச் செயற்பாடு சீராக நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# தொலைதூரம் செல்லும் நிலை வலி- கிழக்கு விவசாயிகள் துயர்

வலி - கிழக்குப் பிரதேசத்தில் கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி பகுதி விவசாயிகள் தங்களது உற்பத்தி விளைப்பொருட்களை, சாவகச்சேரி, திருநெல்வேலி அச்சுவேலி, சுன்னாகம் என தூர இடங்களில் உள்ள சந்தைகளிலே விற்பனை செய்ய வேண்டி இருப்பதாகக்கவலை தெரிவிக்கப் படுகிறது.

வலிகாமம் இடம்பெயர்வுக்கு முன்னர் நீர்வேலி பகுதியிலும் சந்தை கூடியது என்பது குறிப்பிடத்தக்கது. (சி-19)

# பாத்திரங்களில் முட்டியதால் முயற்சி தோல்வி, திருடன் தப்பியோட்டம்

## மீசாலையில் சம்பவம்

[சாவகச்சேரி]

மீசாலை மேற்கு டச்சுவீதியிலுள்ள வீடொன்றினுள் மின்வெட்டு ஏற்பட்ட சமயம் உள் நுழைந்து பதுங்க முயன்ற திருடன் ஒருவன் முயற்சி கைகூடாமல் தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ தினம் இரவு 7.30 அளவில் மின் வெட்டு ஏற்படவே "வீட்டுள் நுழைந்த திருடன் பாத்திரங்களில் மோதுண்டு தடுமாறியதாகவும் பாத்திரங்கள் மூலம் சத்தம் ஏற்'டுத்தவே வீட்டார் கதவினைத் திறந்த சமயம் அவன் பாய்ந்தோடித் தப்பி விட்டான் என்றும் கூறப்பட்டது.

மின்சாரம் இல்லாதவேளைகளில் திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டும் சம்பவங்கள் பரவலாக நிகழ்கின்றன என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (சி-21)

## வி. போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(வடமராட்சி-கிழக்கு)

வடமராட்சி-கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டியில்; இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை நாகர்கோவில் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு உதவி அரச அதிபர் வி ப. வேலாயுதம்பிள்ளை தலைமை தாங்குகின்றார். (செ-43)

# புதிய பணிமனை செயற்பாடு மேலதிக பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணத்தில் கடந்த புதன்கிழமை மேலதிக கல்விப்பணிப்பாளர் பணிமனை நாச்சிமார் கோவிலடிப்பகுதியில் திறந்துவைக்கப்பட்டது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம் பிள்ளை இப்பணிமனை ஆரம்பிக்கப்பட்டதன் குறிக்கோள் மாவட்டத்தில் இருக்கின்ற கல்விவலையங்களின் செயற்பாட்டை இயைபாக்கம் செய்வது மற்றும் கல்வி சம்பந்தமான பிரச்சினைகளைத்தீர்க்கும் விதத்திலும் செயற்படும் எனவும் தமது பணிமனையில் ஒரு நிர்வாக அதிகாரி நான்கு எழுதுவினைஞர்கள் ஒரு பொறியியலாளர். மற்றும் சிற்றூழியர், காவலாளி தலா ஒருவருமாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும்இப்பணிமனையினால், ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான சிபார்சினை செய்ய முடியும் என்றும் தெரிவித்தார்.

மேலதிக மாகாணக்கல்விப பணிப்பாளர் பதவி ஆளுநரால் ஜனாதிபதியின் அனுமதியுடன் வழங்கப்பட்டுள்ள போதிலும் இது ஒரு தற்காலிக ஒழுங்கு முறை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் இப்பணிமனை கல்விவலயத்துக்கு வெளியில் அமைந்திருக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கேள்விச் சபைக்கு தலைவராகப் மேலதிகப் பணிப்பாளர் இருக்கின்ற போதிலும் வலயப்பணிப்பாளர்களினால் சிலமுடிவுகள் சுயாதீனமாக எடுப்பதைத்தடுக்க முடியாத நிலை மேலதிககல்விப்பணிப்பாளருக்குண்டு என்றும்கூறினார். (சி)

## வாரத்தில் 2 நாள் மந்திகையில் சேவை

[வல்வெட்டித்துறை]

மந்திகை மருத்துவ மனையின் பற்சிகிச்சைப் பிரிவின் பல் வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி திருமகள் இராஜேஸ்வரன் வாரத்தில் இரு நாட்கள் [புதன், சனி] வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவ 'மனையில் பதில் கடமை செய்ய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார் என மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(வேலணை)

தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலர் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது இக் கூட்டத்தில் பண்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்.

திட்டம் பற்றியும் பிரமான அடிப்படையிலான மூலதன ஒதுக்கீடு பற்றியும் விவசாயம் சம்மந்தமான விடயம் பற்றியும் ஆராயப்படவுள்ளது.

## ஊர்காவற்றுறை பி. செயலகத்திற்கு புதிய கட்டடம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திற்கான புதிய கட்டடம் ஒன்று மிகவிரைவில் அமைக்கப்படவுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தலைவர் என்.மதனராஜா தெரிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை வைத்திய சாலைக்கு அருகாமையில் அமைக்கப்படவுள்ள இக் கட்டடத்திற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந)

## விருந்தளிக்கும் ஐயனார்

எடுப்பு

சுன்னைப்பதியுறையும் ஐயனாரே எங்கள்
முன்னை வினையறுக்க வருபவனே

தொடுப்பு

அன்னையர்பூரணி புட்கலை மணவாளா
சின்னமானிடரின் சேமம் காப்பவனே

முடிப்பு

மருதும் தாழையும் தென்றலில் அசைந்தாட
விருந்து படைத்திடும் நெல்வயல் கூத்தாட
இருந்திருகோயிலும் சுனையும் கொண்டவா
விருந்து அடியார்க்கு கொடுத்திடு ஐயப்பா
பக்கமதில் அடியார்கள் பாங்குடனே சூழ்ந்துவர
சிக்கலது நீக்கியே காத்தருளும் ஐயப்பா
முக்காலமும் உணர்ந்த முனிவனே தேவா
எக்காலமும் உம்மடி போற்றி நின்றோமே

-கவிஞர் துரையர்-

(சுன்னாகம் ஐயனார் ஆலய இரதோற்சவத்தைமுன்னிட்டு இப்பாமாலை பிரசுரமாகிறது)



## தவக்கால சிந்தனை

12 ஆம் நாள்

என் அன்பார்ந்த மகன் இவரே, இவருக்கு செவிசாயுங்கள் என இறைவன் தவக்காலமாகிய இந் நாட்களில் எமக்கு அன்பான அழைப்பு விடுக்கிறார். ஆம்! தம் ஒரேமகனையே எம்மேல் வைத்த அன்பினால் எம் பாவங்களைப் போக்க அனுப்பினார். அவரே இயேசு கிறிஸ்து, மனுவுரு எடுத்து எம்மை மீட்க வந்த மீட்பர் அப்படிப்பட்ட ஒருவருக்கு செவிசாய்க்க எம்மை இன்றைய நாளில் அழைக்கிறார்.

இதை உணர்ந்து எப்படிச் செவிசாய்க்கின்றோம் என இந் நாட்களில் எம்மை நோக்கிக் கேட்பது பொருத்தமானதாகும். நாம் இன்று வரை இறைவா என் குரலுக்கு செவிசாயும் எனக் கேட்கின்றோமே தவிர இறைவா நான் என்ன செய்ய வேண்டுமென நீர் விரும்புகிறீர் எனக் கேட்கின்றோமா? வீடுகளில் ஆலயங்களில் வழிபாடுகள் செலுத்துகின்றோமே தவிர இறைவன் குரலுக்கு செவிசாய்த்து அதன் படி நடக்கின்றோமா? கிட்டவராதேயும் அங்கேயே நில்லும் என்றது போல எமது நடவடிக்கைகள் அமைகின்றன. நாம் கிறிஸ்தவன் கிறிஸ்தவன் என்கின்றோம் எவ்வளவுக்கு இறைவனின் நற்செய்திக்கு செவிமடுத்து வாழ முயற்சிக்கின்றோம்: என்பதை சிந்திப்போம்.

எம்மை மீட்க தம்மைக் கையளித்த மாபரன் இயேசு, நாம் மனம் திரும்ப அழைப்பு விடுக்கின்றார். இது வரை நாம் அவரது குரலுக்கு செவிசாய்க்காது வாழ்ந்த சந்தர்ப்பங்களை நினைத்து மனம் மாறியவர்களாக அவர் விடுக்கும் குரலுகளு செவிசாய்க்க எம் உள்ளங்களை உடைத்து விட்டுக் கொடுப்போம்.

செல்வி. வெ. சண்முகலிங்கம்

## கண்ணீர். அஞ்சலி

நல்லூர் பிரதேச சபை நல்லூர் பொது நூலக நூலகர்

திருமதி. அன்னலட்சுமி அவர்களின்

அன்புக் கணவர்

**குருநாதபிள்ளை சர்வேஸ்வரன்**

(முன்னாள் பட வரைஞர்)

16-03-2000 வியாழக்கிழமை காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்தித்து துயருறும் அவர் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

தலைவர்,
உறுப்பினர்கள் செயலாளர்
உத்தியோகத்தர்கள்
ஊழியர்கள்

பிரதேச சபை
நல்லூர்.

(C 245)

## ஆசிரியர் பதவிக்காக யாழ். மாவட்டத்திலிருந்து

# க. பொ. த. உயர்தரப்புள்ளிகளின் அடிப்படையில்

# நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம்

[நேற்றைய தொடர்ச்சி]

### சங்கீதம்

திருமதி வை. சூரியவதனி மே/பா திருமதி எம். வேலுப்பிள்ளை பெரியநாவலடி.

திருமதி ஆர். சுகந்தி இல. 5, பென்ரிகோஸ்ரல்லேன், கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

திருமதி டி. சிவசீலன் இல. 46, மணல்தரைலேன், கந்தர்மடம்.

செல்வி. ரி. உதயமலர் 196/ ஏ. நாவலர்வீதி, யாழ்ப்பாணம்.

திருமதி ஈ. விக்னேஸ்வரி குமாரநகர், கைதடிமத்தி.

திருமதி எஸ். ஜெயந்தி 'மணிவாசம்' கல்லூரிவீதி, பருத்தித்துறை.

செல்வி. ரி. சௌந்தராம்பிகை கோவலம், காரைநகர்.

செல்வி. எஸ். பொற்செல்வி பருத்தி அடைப்பு புலோலி தெற்கு, புலோலி.

செல்வி. ரி. தமயந்தி 'சரஸ்வதி வாசா' கைதடி வடக்கு, கைதடி.

செல்வி. என் மதினா ஆலங்குலை.

திருமதி பி. சாரதா டச்சு வீதி மூளாய், சுழிபுரம்.

செல்வி கே. ஜெகன்தினி மணல்வீதி, மட்டுவில்தெற்கு, சாவகச்சேரி.

செல்வி. பி. கெங்காதர்ஷினி இல. 44, முதலாவதுலேன், பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம்.

செல்வி. எஸ். கோமளா டச்சுவீதி, மூளாய், சுழிபுரம்.

செல்வி. எஸ். நிர்மலா மே/பா ரி. சின்னத்துரை தபால் அலுவலக ஒழுங்கை, சாவகச்சேரி.

செல்வி. பி. அனுசூயா மூளாய்வீதி, வட்டுக்கோட்டை.

செல்வி. கே. குபிதா 40/1 இரண்டாவது லேன், பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

செல்வி கே. பிரியதர்ஷினி இல. 4 பிள்ளையார்லேன், திருநெல்வேலி.

செல்வி. என். கலைமகள் மாவதலேன், சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

செல்வி. வி. விஜயபாரதி இல. 26, ராமலிங்கம்வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

செல்வி கே. கலைவாணி நாவற்குழி கிழக்கு, தச்சன் தோப்பு, கைதடி.

திருமதி ஆர். லதா காளிகோயிலடி, கோப்பாய்மத்தி, கோப்பாய்.

திருமதி எஸ். இராஜேஸ்வரன் 'தாய் அகம்' பொற்பதிவீதி, கொக்குவில்கிழக்கு, கொக்குவில்.

திருமதி எஸ். குகநேசன் கிங்அவெனியூ உரும்பிராய் கிழக்கு, யாழ்ப்பாணம்.

செல்வி. கே. பிறேமிளா அரியாலை மேற்கு,

செல்வி. ஆர். ஜெயராணி இல. 562/ 12, தர்மபுரம். பரந்தன்.

திருமதி எம். உமாவதி நாவற்காடு, வரணி.

செல்வி. எம். தயாளினி பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

திருமதி எஸ். மஞ்சுளா இல. 40, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

திருமதி பி. சுகிதா விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு. யாழ்ப்பாணம்.

திரு எஸ். ஞானசொரூபன் கேணிக்கரை, அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.

செல்வி. ஏ. குலநாயகி 31 ஆவது மைல்கல், முழங்காவில்.

செல்வி. சி. கௌரி 104, அரசடி லேன், தும்பளை பருத்தித்துறை.

செல்வி. வை. வளர்மதி 17, வண்ணார் பண்ணை, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

செல்வி. எம். காதம்பரி சுதுமலை அம்மன்கோவிலடி, மானிப்பாய்.

செல்வி என். சசிதா 52, நொத்தாரிஸ் லேன், அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

செல்வி. ஈ. தவகுமாரி இல. 231, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

திருமதி கே. எம். மரகதவல்லியம்மா ஆறுமுகன்லேன், 3 ஆவதுமைல்கல், கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

செல்வி. கே. சறோஜினிதேவி 13, கொண்டலடி லேன், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

திருமதி ஏ. வாசுகி 'அன்னை இல்லம்' வட்டு. கிழக்கு, சித்தங்கேணி.

செல்வி. பி. வரதப்பிரியா 12/ 4, பி. ஏ. தம்பி லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

திரு. கே. கஜன் 'அக்கா அகம்' இணுவில் மேற்கு, இணுவில்.

செல்வி. எம். சுசீலா மீசாலை வடக்கு, கொடிகாமம்.

திருமதி எம். ஜெயலஷ்சுமி மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

செல்வி. வி. இந்துமதி 5 ஆவதுமைக்கல் அருகாமை, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

செல்வி. என். சுஜிதா சேர்ச்லேன், 2 ஆவது குறுக்குவீதி, உடுவில், சுன்னாகம்.

செல்வி. பி. சுஜிதா 'புனித இல்லம்' கரணவாய், வடக்கு.

செல்வி. ஜி. ஜெயாகௌரி நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.

செல்வி. என். பத்மராணி இணுவில்மேற்கு, இணுவில்.

### நடனம்

திருமதி எஸ். சுபாஷினி 'ஆனந்தவாசா', தாவடி வடக்கு, கொக்குவில்.

திருமதி பி. மலர்விழி வறுதலை, விளான், தெல்லிப்பழை.

செல்வி எம். பிறேமநளினி பன்னாலை வீதி, தெல்லிப்பழை.

செல்வி பி. திருமகள் 'மாப்பியன் மைல் லேன்', சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

திருமதி எஸ். வீரசிங்கம் கல்லூரி லேன், மானிப்பாய்.

செல்வி என். அஞ்சலா மே/பா அதிபர், யாழ். வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், உரும்பிராய்.

செல்வி கே. கவிதா ஆடியன் பிட்டி வீதி, சாவகச்சேரி.

செல்வி எஸ். மாதினி இணுவில் மேற்கு, மானிப்பாய் வீதி, இணுவில்.

செல்வி எஸ். அனுசியா பூதவராயர் கோவிலடி, துன்னாலைத்தெற்கு, கரவெட்டி.

செல்வி எம். மேகலா

### ஏனைய பாடங்கள்

ஜெயாரஜனி கஸ்பர் செம்பியன்பற்று வடக்கு, செம்பியன்பற்று. ஆங்கிலம். (1992)

நாகதம்பி பத்மநாதன் நாகர்கோவில் மேற்கு, நாகர் கோவில். ஆங்கிலம் (1998)

தயாளதேவி குணரட்ணம் நாகர்கோவில் மேற்கு, நாகர் கோவில். ஆங்கிலம். (1990)

ஜோசப் எமில்ராஜன் தாளையடி கிழக்கு, தாளையடி. கணிதம் (1992)

பாலசுப்பிரமணியம் பாமா அம்பன், குடத்தனை. சங்கீதம் (1996)

அருந்தவராணி நல்லதம்பி ராணி இல்லம், வல்வெட்டித்துறை. விவசாயம் (1992)

தர்மபாலகிருஷ்ணன் குருபரன் சருந்தரி வளவு, தும்பளை, பருத்தித்துறை சித்திரம் (1995)

சண்முகரட்ணம் கிருபாலினி தம்பசிட்டி, புலோலி தெற்கு புலோலி. ஆங்கிலம் (1996)

தங்கராசா ராஜஸ்ரீகாந்தன் துன்னாலை வடக்கு, கரவெட்டி. ஆங்கிலம் (1995)

சோமசுந்தரசர்மா குகதாஸசர்மா கலாநிதி அச்சகலேன், பருத்தித்துறை. ஆங்கிலம் (1993)

ஈஸ்வரிநாதன் சுபந்தி மணி மஹால், தம்பசிட்டி, புலோலி பருத்தித்துறை. ஆங்கிலம் (1996)

சிவாஜினி குமாரசாமி குரும்பகிட்டி, புலோலி வடமேற்கு, புலோலி. ஆங்கிலம் (1993)

கதிர்காமத்தம்பி நாகநாதன் புலோலி தென்மேற்கு புலோலி. ஆங்கிலம் (1991)

மாணிக்கம் சிவச்செல்வம் புலோலிவடமேற்கு, புலோலி ஆங்கிலம் (1992)

எஸ். காயத்திரி அல்வாய் மேற்கு, அல்வாய். ஆங்கிலம் (1995)

சின்னமணி சிறிதரன் பாடசாலை வளாகம், கரணவாய் கிழக்கு, கரவெட்டி. விவசாயம் (1993)

சிங்கன் லிங்கம் கலைமகள் லேன், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி. சித்திரம் (1995)

எம். வனிதாபெரியதோட்டம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. நடனம் (1997)

தர்மன் நகுலேந்திரன் தேவரையாளி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி. ஆங்கிலம் (1990)

தாரிணி தயாளன் செல்வ பவனம்' வலிகான் தோட்டம் தும்பளைகிழக்கு, கரவெட்டி. ஆங்கிலம் (1999)

கதிரவேலு வாசுகி ஆதுலு அம்மன் கோயில், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி. ஆங்கிலம் (1997)

மீரா அருளானந்தன் பிருந்தாவனம், அல்வாய் கிழக்கு, அல்வாய். ஆங்கிலம் (1994)

கனகசபை பிரபாகரன் யாழ் சரவணபவநாத வித்தியாலய லேன், கோப்பாய் வடக்கு, கோப்பாய். சித்திரம் (1998)

பூபாலசிங்கம் விஷ்ணுஸ்ரீ திருவெண்காடம், அச்சுவேலி. சித்திரம் (1998)

பாலகிருஷ்ணன் நிரஞ்சனா சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். ஆங்கிலம் (1998)

நடராஜா துஷ்யந்தினி பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய். ஆங்கிலம் (1991)

சிவரெட்ணம் சுபாங்கனி விலோதியடி லேன், உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். ஆங்கிலம் (1997)

மணிவாசகம் விதுபிரியா 62, புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். ஆங்கிலம் (1997)

நமசிவாயம் வித்தியா வளர்மதி திரு வீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். ஆங்கிலம் (1997)

ராமச்சந்திரன் பிறேமசாந்தி சிவகரப்பிள்ளையார் கோயிலடி, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். ஆங்கிலம் (1997)

ஜெயாணி இராசகோபால் உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். ஆங்கிலம் (1993)

சண்முகநாதன் கௌஷீதகி தெல்லிப்பழை. ஆங்கிலம் (1993)

ஜேசுபாலன் கிறிஸ்ரிலதா கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பழை. ஆங்கிலம் (1998)

சுபாஷினி சண்முகராஜரட்ணசர்மா வட்டகை, கந்தரோடை, சுன்னாகம். விவசாயம் (1997)

சுதர்ஷினி செல்லப்பா புன்னாலைக்கட்டுவன்தெற்கு சுன்னாகம். சித்திரம் (1993)

சிவகுரு ஜெகஜீவன் சந்தை வீதி, சுன்னாகம். ஆங்கிலம் (1992)

ரக்ஷ்மணன் ரமணன் கஜபதி, சங்குவேலி, மானிப்பாய். ஆங்கிலம் (1998)

ஸ்ரீதா நடராஜா நீர்வேலி மத்தி. நீர்வேலி. ஆங்கிலம் (1995)

சிவலிங்கம் நந்தகோபன் பழம்தோட்டம், அளவெட்டி மேற்கு, அளவெட்டி, யாழ்ப்பாணம் சித்திரம் (1998)

பாலசுப்பிரமணியம் பிறேமிளா ஆங்கிலம் (1998)

ஏரம்பமூர்த்தி சாந்தரூபி பன்னாலை, தெல்லிப்பழை. ஆங்கிலம் (1992)

பாலகிருஷ்ணன் முகுந்தன் அளவெட்டி வடக்கு, அளவெட்டி. ஆங்கிலம் (1992)

மகேஸ்வரன் மைதிலி மணியம் வீதி, தெல்லிப்பழை. ஆங்கிலம் (1992)

எஸ். வான்மதி 21/1, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம். மனையியல் (1995)

என். அமிர்தினி சங்கத்தானை வீதி, சாவகச்சேரி. ஆங்கிலம் (1994)

பாஸ்கரன் ஜீவம் 'ஞானவாசா' 1 ஆவது மைக்கல் அருகாமை, உடுவில், சுன்னாகம். ஆங்கிலம் (1996)

நக்ஷி கமலநாதன் தாவடி தெற்கு, கொக்குவில். ஆங்கிலம் (1997)

நவரட்ணம் சுபாங்கி சந்தை கிழக்குலேன், மானிப்பாய். நடனம் (1997)

ஈஸ்வரநாதபிள்ளைகுமரன் சுதுமலை தெற்கு, மானிப்பாய். ஆங்கிலம் (1993)

சண்முகம் பிறேம்குமார் மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய். ஆங்கிலம் (1993)

தேவதாஸ் யூறிசன்ராஜ் கீரிமலைவீதி, பண்டத்தரிப்பு. ஆங்கிலம் (1992)

ராஜரட்ணம் தவக்குமாரன் சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய். ஆங்கிலம் (1996)

கல்யாணி கமலேந்திரம் சுதுமலை வடக்கு, மானிப்பாய். ஆங்கிலம் (1991)

ஸ்ரீநிவாசன் ஜெபந்தி சந்தைவீதி, சுதுமலை வடக்கு, மானிப்பாய். ஆங்கிலம் (1995)

செல்வராஜா சுரேஷ் மே/பா செல்வராணி புலவர்வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய். ஆங்கிலம் (1991)

தேவராஜா ஸ்ரீரஜனி சிவன் கோவிலடி, சித்தங்கேணி. சித்திரம் (1997)

தர்மினி ராஜரட்ணம் சிலம்பு புளியடிவீதி, சங்கானை. நடனம் (1998)

வாஜனி ராஜேந்திரா கல்லூரிவீதி, வட்டுக்கோட்டை. ஆங்கிலம் (1995)

செல்வராஜ் சதாஜீமே/பா எஸ். செல்வராஜா அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. ஆங்கிலம் (1998)

சோபனா நவரட்ணம் மாவடி மூளாய்வீதி, வட்டுக்கோட்டை. ஆங்கிலம் (1994)

ஞானசந்திரமூர்த்தி பன்னாகம் தெற்கு, சுழிபுரம். ஆங்கிலம் (1991)

(நாளை தொடரும்)

## பரீட்சை திடீர் ஒத்திவைப்பு கேரளத் தாதிகள் ஏமாற்றம்

(கொழும்பு)

அமெரிக்க கல்லூரி ஒன்றினால் நடத்தப்படவிருந்த தாதியர் பயிற்சி ஒன்றுக்கு தேற்றும் பொருட்டு கடந்த புதன்கிழமை கொழும்புக்கு வந்துசேர்ந்த நூற்றுக்கணக்கான இந்தியத் தாதிகள் அப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து ஏமாற்றமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ராஜகிரியாவில் நிகழ்ந்த தாக்குதல் சம்பவத்தின் எதிரொலியாகவே இப்பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க வெளிநாட்டுத் தாதிகள் கல்லூரி பட்டப் படிப்புத் தொடர்பான இப் பரீட்சை தெற்காசியப் பிராந்தியத்திலே கொழும்பில் மாத்திரமே நடைபெறுமென தெரிவிக்கப்பட்டதால் கேரளாவிலிருந்து நூற்றுக்கணக்கான தாதிகள் கொழும்பு வந்திருந்தனர்.

இப்பரீட்சையில் சித்தியடையாவிடில் அமெரிக்காவில் தாதியர் தொழிலைப்பெற முடியாதென்பதால் பல இளம் பெண்கள் தத்தம் பெற்றோருடன் கொழும்பு வந்தார்கள்.

முன்னதாகவே பரீட்சை ஒத்திவைப்புப் பற்றித் தமக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தால் வீணான பணச் செலவையும் சிரமங்களையும் தவிர்த்திருக்கலாம் என அவர்கள் வேதனை வெளிப்படுத்தினர். (சி)

## கசிப்புடன் சைக்கிளையும் கைவிட்டு ஓடி மறைந்த மர்மநபர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பழைய பொலிஸ் நிலைய வீதியால் சைக்கிளில் கசிப்பு கொண்டு வந்த நபர் ஒருவர் திடீரென அப்பகுதியிலுள்ள வளவினுள் நுழைந்து, சைக்கிளையும், கசிப்பினையும் போட்டுவிட்டு ஓடிமறைந்துள்ளார்.

இச்சம்பவம் பற்றி அறிந்த பொலிஸார், அவற்றினை மீட்டுச் சென்றனர்.

பிரஸ்தாப நபர் பற்றிய விபரம் அறியப்படவில்லை. (சி-21)

## மாணவர்கள் சங்கக்கூட்டம்

மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க. அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 22திகதி பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

### லாலுபிரசாத் யாதவ், ராப்ரிதேவி மீது

# முறைகேடாக சொத்து சேர்த்ததான வழக்கிற்கு மாநில ஆளுநர் அனுமதி

(புதுடில்லி)

பீஹார் மாநில முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவ் அவருடைய மனைவியும் இந்நாள் பீஹார் மாநில முதல்வருமான ராப்ரிதேவி ஆகியோர் மீது வழக்குத் தொடர மாநில ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார்.

வருமானத்துக்குப் புறம்பாக முறைகேடான வகையில் சொத்துசேர்த்ததான வழக்குப் பதிவு செய்வதற்கு மத்திய புலனாய்வு அமைப்பிற்கு இவ்வனுமதி வழங்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் 1996 வரையான காலப் பகுதியில் பீஹார் மாநில முதல்வராக லாலு பிரசாத் யாதவ் இருந்தவேளையில் கால்நடைத் தீவன ஊழலில் இருந்து 42.52 இலட்சம் சொத்து சேர்த்ததான குற்றத்திற்கு உடந்தையாக இருந்தார் என்ற வகையில் ராப்ரிதேவி மீது வழக்குத் தொடரப்பட இருக்கிறது.

ராப்ரிதேவி 1990 தொடக்கம் 1996 வரையான காலப் பகுதியில் அரசியலில் ஈடுபட்டிருக்க வில்லை என்பதால் அவர் மீது வழக்குத் தொடர ஆளுநரின் அனுமதி தேவையில்லை எனக்கூறப்படுகிறது.

இனிவரும் இரு கிழமைகளிற்குள்ளதாக இவர்கள் மீதான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் ஆரம்பமாகிவிடும் என இந்தியச் செய்திகள் தெரிவித்துள்ளன. (சி-9)

## தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்த பல கட்சிகள் தீவிர ஏற்பாடு

அமெரிக்க அதிபர் பில்கிளின்டன் இந்திய வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள் செய்ய பல கட்சிகள் முயற்சிக்கின்றன.

டில்லி பொலிஸார் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்கு தடை விதித்துள்ள போதிலும்,

தடையை மீறி ஆர்ப்பாட்டங்கள் செய்யப் போவதாக சி. பி. ஐ, ஆர். எஸ். பி, பார்வாட் புளக், மாக்ஸிஸ கம்யூனிஸ்ட்கட்சிஎன் பனஉள்துறை அமைச்சுக்கு எழுதியுள்ளன.

அதேசமயத்தில் அதிபர் இந்தியப் பாராளுமன்றில் உரை நிகழ்த்தும் போது, அதில் கலந்து கொள்ளாது பகிஸ்கரிக்கப் போவதாகவும் சுட்டிக் காட்டியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## இந்திய, பாகிஸ்தான் அணுவாயுத எண்ணிக்கை பற்றி அமெரிக்கா

(வோஷிங்ரன்)

பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் கைவசம் இருக்கும் அணுவாயுதங்களின் எண்ணிக்கையை அமெரிக்க அரசு வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது. எனத்தெரிவிக்கப்படுகிறது.

இந்த வகையில், பாகிஸ்தானில் தற்போது 30 அணுவாயுதங்களும், இந்தியாவில் 60 அணுவாயுதங்களும் இருப்பதாக அமெரிக்கச் செய்திகள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் அரசிடம் மிக அண்மைக் காலத்தில்கூட 10 அணுவாயுதங்களே காணப்பட்டபோதும் அணுவாயுத உற்பத்தியில் திடீர் அதிகரிப்பு காணப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. (எஸ்-9)

## தமிழ் மண்ணும் தாயகமும் பெருமை கொள்வதான பணியே தேவை

### பட்டமளிப்பு விழாவில் கலைஞர்

(சென்னை)

"எந்த நாடு நோக்கி நீவிர் சென்றிடினும் அந்தந்த நாடுகளிலெல்லாம் உங்கள் ஆற்றலையும் அறிவையும் பயன்படுத்திபுகழை நிலை நாட்டம் வேண்டும். தமிழ் மண்ணுட தாயகமும் பெருமை கொள்ளும் வகையில் செயற்படும் உணர்வு உங்கள் குருதியோடு ஒன்றிட வேண்டும்.''

இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி சென்னைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் கூறினார்.

''தீண்டாமை என்பது மனித நாகரிகத்துக்கு அப்பாற்பட்ட ஓர் அவமானச் சின்னம். சாதியின் பெயரால் மதங்களின் பெயரால் பகைமையை வளர்த்துக் கொண்ட மனிதனை மனிதன் அழித்திடும் மாபெரும் அவலம் தொடராதிருக்க இளைஞர் சமுதாயம் கிளர்ந்தெழ வேண்டும்.'' என்றும் கலைஞர் இந்நிகழ்வில் வேண்டுகோள் விடுத்தார்.

## தமிழகத்தில் இலங்கையருக்கு தண்டனை

(சென்னை)

தமிழ்நாட்டில் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த ஒருவருக்கு 10 வருடகாலக் கடுழியச்சிறைத்தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது

ஹெரோயின்என்றபோதைப் பொருளை வைத்திருந்தார் என்றகுற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஆர். கார்த்திகேசன் என்பவருக்கே மேற்படி தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கை விசாரித்த விசேட நீதிபதி சந்தேக நபரான ஆர். கார்த்திகேசனுக்கு 10 வருட கடூழியச் சிறையும், ஒருலட்சம்ரூபா இந்திய நாணயமும் தண்டப் பணமாகச் செலுத்த வேண்டுமெனவும் தீர்ப்பளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ-சி)

## பொருளாதார தடைதளர்வு

(தெஹறான்)

ஈரான்மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை அமெரிக்கா தளர்த்தியிருக்கிறது.

அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலர் இது தொடர்பான அறிவிப்பினை அண்மையில் வெளியிட்டுள்ளார்.

இதேசமயம் 1979 முதல் முடக்கி வைக்கப்பட்ட ஈரானின் சொத்துக்களை திருப்பிக் கொடுக்கவும் அமெரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளது. (சி-9)

## அமெ. அதிபர் இன்று விஜயம்

(வோஷிங்ரன்)

அமெரிக்க அதிபர் பில்கிளின்டனின் தெற்காசிய விஜயம் இன்று ஆரம்பமாகிறது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு அதிபர் விஜயம் மேற்கொள்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## தமிழகச் செய்திகள்

### பாதுகாப்பு

சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அலுவலகம் 24 மணி நேரமும் பாதுகாப்புப் படையினரால் காவல் செய்யப்படுகிறது எனத்தெரிவிக்கப்படுகிறது.

### உருக்காலை

பலகோடி ரூபா பெறுமதியான சேலம் உருக்காலையைத்தனியாருக்குக்கொடுக்க வேண்டாம் என்று பலத்த எதிர்ப்பு தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

### ஒலிநாடா

சீர்காழி சிவசிதம்பரம், தீபன் சக்கரவர்த்தி போன்ற இளம் பாடகர்களால் பாடப்பட்ட திருக்குறள் இசை ஒலிநாடா வெளியிடப்பட்டுள்ளது.

டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா கௌரவ கலைஞராக இந்த ஒலிநாடாவில் இடம்பெற்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### உண்ணா விரதம்

மக்களின் குறைகளை நீக்கும்படி தமிழக அரசை வலியுறுத்தி சிவகங்கையில் காங்கிரஸ்கட்சி ஒருநாள் உண்ணா விரதம் நடத்தியது.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திண்டிவனம் ராமமூர்த்தி தலைமையில் இவ்வுண்ணா விரதம் நடைபெற்றது.

### மதுவிலக்கு

குமரி முதல் சென்னை வரை மதுவிலக்குப் பிரசாரமும் மனுநீதி யாத்திரையும் அம்பேத்கர் இயக்கத்தைச் சேர்ந்த வை. காரை சுந்தரத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர் தென் மண்டலயாத்திரையை முடித்துக்கொண்டு வடமண்டலம் செல்ல இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (து-சி)

## நீர்ப்பிரச்சினை: உலக நாடுகளின் பிரதிநிதிகள் மாநாடு லண்டனில்

(லண்டன்)

உலகில் எதிர்நோக்கப்பட்டு வரும் நீர்ப்பிரச்சினை குறித்தும் அதனை வரும் 25 வருடங்களில் தீர்ப்பதற்காய் மக்களை விழிப்புணர்வு கொள்ள வைப்பதற்குமான மாநாடு ஒன்று இடம் பெற்று வருகிறது.

லண்டனின் ஹேக் நகரில் இடம் பெற்றுவரும் இம்மாநாட்டில் கலந்துகொள்ளவென 130 நாடுகளைச் சேர்ந்த 3000 இற்கும் மேற்பட்ட உலகப் பிரதிநிதிகள் கூடியுள்ளனர்.

அடுத்த நூற்றாண்டில் மக்கள் எதிர்நோக்கவிருக்கும் நீர்ப்பிரச்சினை குறித்து ஆராயப்படுவதும் 25 வருடங்களுக்குள் நீர்ப்பிரச்சினையினை முடிவுக்குக் கொண்டு வர சரியான வழிவகை தேடப்படுவதுமே இம் மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

இதேசமயம் இச் சுத்தமான குடிநீரின்மைப் பிரச்சினையால் வருடந்தோறும் ஆயிரக் கணக்கானோர் இறக்க நேரிடுவதாகவும் பல்லாயிரக் கணக்கானோர் பலவித நோய்களுக்கு உட்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கொலம்பியாவில் தொடரும் மோதலில் அப்பாவி மக்கள் 18 பேர் பலி

(பொகோதா)

கொலம்பியாவில் தொடரும் போரின் காரணமாக கடந்த ஒருசில தினங்களில் மட்டும் 17 அப்பாவிப் பொது மக்கள் கொல்லப் பட்டதாக கொலம்பிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மார்க்ஸ்ட் கெரில்லாக்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையேயான இம் மோதல் சம்பவங்களில் இறந்தோரிற் பலர் பெண்களும் குழந்தைகளுமாவர்.

இதேசமயம், கடந்த ஞாயிறன்று, மார்க்ஸிஸ்ட் கெரில்லாக்கள் 8 குழந்தைகளை கடத்தியதாவும், பின்னர் அனைத்துக் குழந்தைகளையும் சுட்டுக் கொன்றிருப்பதாகவும் தெரியவருகிறது. (சி-9)

## அத்து மீறி சொத்துகள் சேர்த்தில் வழக்கை நோக்கும் புறூணே இளவரசர்

(புறூணே)

அளவுக்கு மிஞ்சி 270 கோடி டொலர் சொத்துக்கள் சேர்த்தமைக்கும் பதவித் துஷ்பிரயோகம் செய்தமைக்கும் எதிராக புறூணே இளவரசர் ஜவ்றி மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வருமானவரியினரால் தொடரப்பட்ட வழக்கில் ஜிவ்றி 17 விமானங்கள் 2000 வாகனங்கள் பெருந்தொகை நகைகள் வள்ளங்கள் ஆகிய சொத்துக்கள் வைத்திருக்கிறார் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஜிவ்றி புறுணேயின் நிதி மந்திரியாக 11 ஆண்டுகள் இருந்தாரென்றும் சொல்லப்படுகிறது.

இவர்பற்றி அங்கிருந்து கிடைக்கும் செய்திகளில் இருந்து இவருக்கு நான்கு மனைவிகளும் 18 வளர்ப்புப் பிள்ளைகளும் 35 குழந்தைகளும் இருப்பதாகக் கூறப்படுகிறது. (சி)

## உலகப் போருக்கு விமானம் கொடுத்தவர் மலேசியா வாழ் யாழ்ப்பாணத் தமிழரே

(கோலாலம்பூர்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷாருக்கு யுத்த விமானம் வாங்கிக் கொடுத்ததாக முந்திய செய்திகள் கூறுகின்றன.

இலங்கையைச்சேர்ந்தகுறிப்பாக வடபகுதி மக்கள் 19 ஆம் நூற்றாண்டில் தொழிலின் நிமித்தம் மலேசியா சென்று குடியேறி வாழ்ந்து வந்தார்கள்.

அக்காலப்பகுதியில் மலேசிய — பிரிட்டிஷ் அரசில் பலதரப்பட்ட பதவிகளை யாழ்ப்பாணத்தவர்களே வகித்து வந்தனர்.

இவர்கள் இரண்டாம் உலகப்போரில் பிரிட்டிஷாருக்கு உதவும் பொருட்டு சிறு ரகயுத்த விமானம் ஒன்றினை வாங்கிக் கொடுத்ததாகவும் அவ் விமானத்துக்கு யாழ். சம்பந்தப்பட்ட பெயரே சூட்டப்பட்டதாகவும் முந்திய செய்திகள் கூறுகின்றன.

## ஏழு சிறுவர் ஸ்தலத்திலேயே பலி சூரிச் வீதியில் துயரச் சம்பவம்

(ஒட்டாவா)

கனடாவில், பாடசாலைச் சிறுவர்களை ஏற்றிவந்த வாகனம் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 7 சிறுவர்கள் அந்த இடத்திலேயே துடிதுடித்துப் பலியாகினர்.

கனடாவின் சூரிச் மாகாணத்தில் 2 தொடக்கம் 5 வயதுடைய 10 பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிவந்த மினிவான், கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த வாகனத்துடன் மோதியதில் இவ் உயிர் இழப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

7 குழந்தைகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். ஒரு குழந்தை மிகவும் கவலைக்கிடமான் நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளை ஏற்றிச் சென்ற வானில் சரியான பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாததாலும், இச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்வதாகவும் கனடா பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. (து-9)

## தாய்வான் விவகாரம் சீனாவுக்கு தூதுவர் மூலம் அமெ. அழுத்தம்

(வோஷிங்ரன்)

தாய்வான் விவகாரம் தொடர்பாக அமெரிக்காவுக்கான சீனத்தூதுவர் மூலம் அமெரிக்க அரசு சீனாவுக்கு அழுத்தம் கொடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்வானில்இம்மாதஇறுதியில் அதிபரைத்தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெறவிருக்கிறது.

சுதந்திர ஆதரவாளர்களான சீனர்களுக்கு சார்பாக இத்தேர்தலில் யாரும் வாக்களிக்கக்கூடாதென தாய்வான் மக்களுக்கு சீனா எச்சரிக்கை விடுத்து வருகிறது.

இதனைக்கண்டித்து இவ்வாறான எச்சரிக்கைத் தொனியை குறைத்துக் கொள்ள வேண்டும் என சீனத்தூதர் மூலம்அமெரிக்கா எச்சரித்துள்ளது. (சி-9)

### இடர்காலக் கொடுப்பனவு வழங்காவிடில்

# தொழிற்சங்க நடவடிக்கையில் குதிக்க வட-கிழக்கு மருத்துவர்கள் முஸ்தீபு?

(கொழும்பு)

இடர் காலக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமெனக் கோரி வடக்குக் கிழக்கில் பணியாற்றும் டாக்டர்கள் தொழிற்சங்க நடவடிக்கையொன்றில் குதிக்கத் திட்டமிட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்ட 10 நாட்களுக்குள் இக்கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர்கள் காலக் கெடுவிதித்திருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இது தொடர்பாகசம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்திருப்பதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கப் பேச்சாளர் ஒருவர் கூறியிருக்கிறார்.

வேறு மாவட்டங்களிலிருந்து வந்து வட-கிழக்கில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு மாத்திரம் இடர்காலக் கொடுப்பனவு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆனால் வடகிழக்கிலேயே வசிக்கும் மருத்துவர்களுக்கு இக்கொடுப்பனவுவழங்கப்படவில்லை இது அநீதியான செயல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார், (சி)

## கொள்ளைச் சந்தேகநபர் பொலிஸ் காவலில் தற்கொலை

பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கல்கிஸை பொலிஸ் நிலையக் காவலில் வைக்கப்பட்டிருந்த நபரொருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கல்கிஸை மொரட்டுவை தெஹிவளை ஆகிய பகுதிகளில் வீடுடைப்பு, கொள்ளை ஆகிய சம்பவங்களில் இவர் ஈடுபட்டிருந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## வடமராட்சியில் இந்திய பிரதித் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

இந்திய பிரதித்தூதுவர் சிவப்பிரததிரிப்பாதி நேற்று முன்தினம் வடமராட்சிக்கு விஜயம் செய்தபோது தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

யாழ்.அரச அதிபர் கே. சண்முகநாதன் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.பாலச்சந்திரன் ஆகியோரும் தூதுவருடன் சென்றிருந்தனர்.

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ணசாரதா சேவாச் சிரமத்திற்கும் சென்றதூதுவர் ஆச்சிரமச்செயற்பாடு பற்றி கேட்டறிந்ததுடன்10 இலட்ச ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நூலகத்தையும் கலாசார மண்டபத்தையும் பார்வையிட்டார்.

இந்திய பிரதித்தூதுவர் திரிப்பாதி பருத்தித்துறை நகரசபைக்கு விஜயம்செய்திருந்ததுடன் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமியையும் சந்தித்துப் பேசினார்.

(வ-11-43-52)

## மாவை எம். பி. இந்தியதூதுவர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி தேசியப்பட்டியல் எம். பி. மாவை சேனாதிராஜாவை இந்தியப் பிரதித்தூதுவர் திரிபாதி த. வி. கூ. யாழ் அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

யாழ்.மாவட்டத்தின் நிலைமைகள் குறித்து தூதுவரிடம் மாவை சேனாதிராஜா எடுத்துக் கூறியதாகத் தெரிவருகிறது.

## இந்திய மீனவரை தூதுவர் சந்தித்தார்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் இடம் பெற்ற கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் இரு இந்திய மீனவர்களையும் இந்திய பிரதித் தூதுவர் நேற்று முன்தினம் நேரில் சென்றுபார்வையிட்டார்.

இம்மீனவர்களை இந்தியாவிற்கு அனுப்புவதற்கான முயற்சிகளைத்தான் மேற்கொள்வதாக அவர்களிடம் தூதுவர் தெரிவித்தார். (வ)

## முதன் முதலாக 42பேருக்கு சாரதி அனுமதிப்பத்திரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மோட்டார் வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான எழுத்துப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சை நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்றது.

மேற்படி பரீட்சைகளில் சித்தியடைந்த 42 பேருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது.

கடந்த 10 வருடங்களின் பின் தற்போதே மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள பரிசோதகர் ஒருவர் யாழ்ப்பாணம் வந்து பரீட்சை நடத்தி அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (சி)

## பரு. பிரதேச செயலக ஆதரவுடன் தையற் பயிற்சி நிலையம்

(பொலிகண்டி)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஆதரவுடன் பொலிகண்டி, மேற்கு இளைஞர் கழகமும் மாதர் சங்கமும் ஒன்றிணைந்து தையற் பயிற்சி நெறி ஒன்றை பொலிகண்டி நவிண்டில் வீதியில் ஆரம்பித்துள்ளன.

இப் பயிற்சி நெறியில் பருத்தித்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பயிற்சியாளர்கள் 30 பேர் வரையில் பங்கு கொண்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.

இவர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பதும் இவர்களுக்கு நாளாந்த ஊக்குவிப்பு உதவிப்பணமாக தலா 30 ரூபா வழங்கப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப் பயிற்சி நிலையம் முன்னர் பருத்தித்துறை பிரதேச செயலரினால் திறந்து வைக்கப்பட்டது, இத் திறப்பு விழாவிலே பிரதேச செயலக ஊழியர்கள் மாதர் சங்கத்தினர், இளைஞர் கழகத்தினர் முதலானோர் கலந்து கொண்டனர். (சி)

## கஜு வீட்டுத் தோட்டத் திட்டம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கஜு வீட்டுத்தோட்டத் திட்டத்தின்கீழ்கடந்தவருடம் 13 ஆயிரத்து 333 குடும்பங்களுக்கிடையே 3.5 என்ற வீதத்தில் 50 ஆயிரம் கஜு மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி-77)

## மஹா கும்பாபிஷேகம்

(நீர்வேலி)

புத்தூர் வடக்கு அருள்மிகு காரைக்கூடல் ஆலயமஹா கும்பாபிஷேகம் நாளை திங்கள் கிழமை நடைபெறவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறுகின்றது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 21நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. (செ-19)

## இன்று

(அரியாலை)

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று ஞாயிறு மாலை 3 மணிக்கு பூரணை அபிஷேகத்தை முன்னிட்டு உள்வீதி உலா நடைபெறும். (சி)

### மூதூர்பிரதேசத்தில்,

## பொலிஸ் நிலையம் மீது புலிகள் தாக்கு ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் காயம்

(மட்டக்களப்பு)

மூதூர் பிரதேசத்தில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஸ்ரீலங்கா பொலிஸ் பிரிவைச்சேர்ந்த ஒருவர் காயமடைந்திருப்பதாகப் படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன

அண்மையில் மூதூர் பச்சனூர் பொலிஸ்நிலையத்தை நோக்கி விடுதலைப் புலிகள் ரொக்கட் தாக்குதல்களை மேற்கொண்டபோதே மேற்படி பொலிஸார் காயமடைந்துள்ளார்.

அத்துடன், புலிகளின் துப்பாக்கி நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவ வீரர் ஒருவருடைய சடலத்தினை கிண்ணியா மதீனா மையவாடிக்கருகே மீட்டிருப்பதாகவும் படைத்தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (க-9)

## கடைக்கு முன்பாக நிறுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் துணிகர திருட்டு

(இணுவில்)

பலசரக்குக் கடை ஒன்றிற்குச் சென்றுவிட்டுத் திரும்பிய நபரொருவர் அக்கடைக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த தனது மோட்டார் சைக்கிள் காணாமல் போயிருப்பது கண்டு அதிர்ச்சியுற்றார்.

இச்சம்பவம் கடந்த சில தினங்களுக்கு முன் மாலை வேளை சுன்னாகம் இலங்கை வங்கிக் கிளைக்கு அண்மையில் நிகழ்ந்துள்ளது.

இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் சமீபகாலமாக குடாநாட்டில் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி-49)

## கோண்டாவில் ப. தெ. வ. கூட்டுறவு சங்க அபிவிருத்திப் பணி துரிதம்

### பொதுமுகாமையாளர் தகவல்

கோண்டாவில் பனை தென்னை வளக் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைத் துரித கதியில் மேற்கொண்டு வருவதாக மேற்படி சங்கத்தின் பொது முகாமையாளர் பி. யேசுராஜா தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் சங்கத்தால் திறந்து வைக்கப்பட்ட கிராமிய வங்கி தொழிலாளர் நலனுக்கும் பல வழிகளிலும் உதவும் என்று குறிப்பிட்ட அவர், சங்க உறுப்பினர்கள், தலைவர், கூட்டுறவுத்துறை மேலதிகாரிகள் தொழிலாளர்கள், ஊழியர்களின் ஒத்துழைப்புடன் அபிவிருத்தித் திட்டங்கள் முழுமையாகச் செயற்படும் என்றும் சொன்னார். (சி-49)

## நெடுந்தீவுக்கு ஜவர் குழு விஜயம் நீர் விநியோகம் பற்றி ஆலோசனை

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்திற்கு ஜி.ரி.சற்றில் அங்கம் வகிக்கும் 5பேர் கொண்ட குழுவினர் கடந்த 14 ஆம் திகதி விஜயம் செய்தனர்.

இக்குழுவினருடன் நெடுந்தீவு சாறாப்பிட்டி குழாய்வழி நீர்விநியோக விஸ்தரிப்பு புதிய நீர்த்தாங்கிகள் அமைத்தல், புதியகுழாய்கள் மாற்றுதல் போன்ற விடயங்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை நீர்விநியோக நடவடிக்கையைப் பொறுத்தவரை கடந்த சில ஆண்டுகளாக அக்கறையுடன் செயற்பட்டுவரும் வெளிநாட்டு நிறுவனம் ஜி.ரி,சற். என்றும்தெரிவிக்கப்படுகிறது. (சி-82)

## ஈச்சமோட்டைப் பகுதியில் மாணவிகளிடம் திருட்டு முயற்சி

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டைப் பகுதியில் சமீபத்தில் நிகழ்ந்த இரு கொள்ளை முயற்சிகள் பற்றிய தகவல் வெளியாகியுள்ளது.

தமிழ்த்தினவிழாவில் பங்குபற்றிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த இரு மாணவிகளை ஈச்சமோட்டைப் பகுதியில் வைத்து அண்மித்த இளைஞன் ஒருவன் ஒரு மாணவியின் தங்கச்சங்கிலியை கழுத்திலிருந்து அபகரிக்கமுயன்றதாகவும்.மாணவிகள் சைக்கிள்களுடன் தடுமாறிக் கீழே விழவே இளைஞன் தப்பியோடி விட்டதாகவும் தெரியவருகிறது.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில் அதே இளைஞன் இன்னுமொரு மாணவியிடமும் இதேபோன்று கொள்ளை முயற்சி மேற்கொண்டபோது அம்மாணவி வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதால் இளைஞன் முயற்சியைக்கைவிட்டுத் தப்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப மாணவி இச்சம்பவத்தால் அதிர்ச்சியுற்றுக் காணப்பட்ட காட்சி மிகப் பரிதாபமாக இருந்ததாம். (சி-59)

## 'தன் சேவையால் சைவஒளியை ஏற்றியவர் அமரர் கந்தசாமி

### சிவத்தமிழ்ச் செல்வி புகழாரம்

''அமரர் வித்துவான் கந்தசாமி அவர்கள் மாதகல் கிராமத்திற்குத்தனது சேவையினால் சைவ ஒளியை ஏற்றி வைத்தவர். நுணசை முருகமூர்த்தி ஆலயத்தில் தனது அரிய சேவையினால் நிலையான ஒரு இடத்தைப் பெற்றுக் கொண்டவர். இவர் புராண படனம் சொற்பொழிவு, கூட்டு வழிபாடு என்பவற்றாலும், சரியைத் தொண்டுகளிலும் தன்னிகரில்லாச் சிறந்த சேவையை ஆற்றிவந்தவர்''

இவ்வாறு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அமரர் மாதகல் வித்துவான் பொன் கந்தசாமியின் மறைவையொட்டி வெளியிட்ட இரங்கற் செய்தியில் தெரிவித்துள்ளார் (சி)

## காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கக் கலந்துரையாடல் இன்று

(அச்சுவேலி)

வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்டு காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்க அங்கத்தவர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று 19 ஆம் திகதி மேற்படி சங்கத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம்திகதி இச்சங்கத்தால் நடாத்தப்படவுள்ள பேரணி மற்றும் காணாமல் போனோர் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்தல் போன்ற முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளதால் இதில் சம்பந்தப்பட்ட அனைவரையும் இன்றைய தினம் யாழ்.றக்கா வீதியில் உள்ள காணாமல்போனோர் பாதுகாவலர் சங்க மண்டபத்தில் கூடுமாறு சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(சி-14)

# புங்குடுதீவு வைத்தியசாலையை சீராக இயங்க வைக்கக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]
புங்குடுதீவிலுள்ள அரசினர் வைத்தியசாலையை சீராக இயங்க வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி மடத்து வெளி ச. ச. நிலையம், புனித சவேரியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய அமைப்புக்கள் யாழ். மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினரும் ஈ. பி. டி. பி. யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு மகஜர் ஒன்றை ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் என். மதனராஜாவிடம் கையளித்துள்ளனர்.

நிரந்தர வைத்தியர் இன்மையால் இப்பகுதி மக்கள் பெரும் கஸ்ரங்களை எதிர் நோக்குவதாகவும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)

## இன்று சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தரும் திறந்த பல்கலைக்கழக பிராந்திய இயக்குநரும் பல்கலைக்கழகத்தின் வேலைத்திட்டம் மற்றும் விடயங்கள் குறித்து இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (சி)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் கரவெட்டி வாசி காயமுற்றார்

(அச்சுவேலி)
யாழ்-பருத்தித்துறை பிரதான வீதி வழியாக யாழ்ப்பாணத்திலிருந்து வடமராட்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து வீதியிலிருந்து விலகிச் சரிந்து வீழ்ந்ததில் அந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் காலிலும் கையிலும் காயங்களுக்கு உள்ளாகினார்.

மேற்படி சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது வீதியில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் முன்புற சக்கரத்தின் ரியூப் திடீரென வெடித்து காற்று வெளியேறியதாலேயே மேற்படி திடீர் விபத்து அச்சுவேலி தெற்குப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இந்த விபத்தில் அந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநரான கரணவாய் கரவெட்டியைச் சேர்ந்த எஸ். சிவகாந்தன் என்பவரே காயமடைந்தவராவார். (சி-14)

## கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் மாவை. எம். பி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
குருநகர், பாசையூர், கொழும்புத்துறை கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் தமிழர் விடுதலைக் கூட்டணி தேசியப் பட்டியல் எம்.பி. மாவை சேனாதிராஜாவை த.வி.கூ. யாழ். அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

ஒரு மணிநேரம் நடைபெற்ற இச்சந்திப்பின் போது கடற்றொழில் செய்ய அனுமதிக்கும் நேரம், தூரம் வள்ளங்களில் இயந்திரங்களோ, பாய்களோ பாவிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறித்தும்.

காலதாமதமாக தொழிலுக்குச் சென்று திரும்புவதால் கடலுணவுப்பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் பல சிக்கல்கள் உள்ளதாகவும் மாவை எம்.பி.யிடம் எடுத்துக் கூறினார்.

இது விடயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஏற்கனவே கதைத்துள்ளதாகவும் மீண்டும் அவ்வதிகாரிகளுடன் இது விடயமாக கதைத்து நடவடிக்கை எடுப்பதாக மாவை எம்.பி. தெரிவித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

## வருடாந்த பொதுக்கூட்டம்

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர் வரும் ஏப்ரல் மாதம் 2ம்திகதி ஞாயிற்றுக்கிழமை சங்கமண்டபத்தில் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது [சி-23]

## தேசிக மாமணி வாழ்க

செந்தமிழ் மொழியின் செழுமையைச் சுவையைத்
திரட்டிநற் பாகெனச் செய்தே
என்றனுக் கன்போ டெடுத்தெடுத்தூட்டி
இலக்கண அம்புலி காட்டிச்
சிந்தையில் இன்பஞ் செழித்திடச்செய்த
தேசிக மாமணிச் செவிலி
கந்தவேள் அருளால் இசைபட வாழ்க
காலமெ லாந்தமிழ் வளர்த்தே.

திரு. க. உமாமகேசுவரன்.

## தமிழ் விழி திறந்த வித்தகரே வாழி!

விழிகளைத் திறந்து விட்ட
வித்தகரே! தமிழினத்தார்
எழில் வாழ்வு காணுதற்கே
எத்தனை கனவு கண்டீர்கள்
மொழிகாக்க மூதறிஞர் நெறிகாக்க
மூச் செல்லாம் பேச்செல்லாமும்
உழைத்திட்ட இறையே! உங்களால்
உயர்ந்தது தமிழுலகன்றோ.

மதுரகவி-காரை எம். பி, அருளானந்தன்
(ஆசிரியர் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்)

## பாரதனிற் பரவுமவர் பாவம் போமே

நீரேறு புன்சடையில் நிலவைச் சூடி
நின்நாமம் தனையுருகி நின்றே பாடி
சீரேறு நின்னடியார் சித்தங் களிப்பச்
சிறியோமெம் பிழைபொறுக்கும் சிந்தைக் கரியோய்
வாரேறு முலைவாலாம் பிகையி னோடு
வருத்திவரு மும்மலமும் வதைந்தே வீழத்
தேரேறும் திருவண்ணை வைத்தீஸ் வரனே
துயரில்லா வாழ்வுதனிற் துலங்கச் செய்யே.

மூசிகவா கனநாதர் முன்னே ஓட
முருகனொடு வள்ளிதெய்வ யானை சூழ
கூசுமெழில் வைரவரும் கோவின் பாலாற்
குளிப்பாட்டி யருள்பெற்ற சண்டீசனுமாய்
வாசமலர்க் கொன்றையணி வைத்தீஸ் வரனார்
வாமபாகத் துறைவாலாம் பிகையோ டுலவும்
பேசரிய பஞ்சரத பவனி பார்த்துப்
பாரதனிற் பரவுமவர் பாவம் போமே.

நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்.

## "சட்டநாதர் சிவனேயுன் சரணமையா"

ராக :- சகானா    தாளம்:- ஆதி

பல்லவி

சட்டநாதர் சிவனேயுன் சரணமையா-நாம்
பட்டதெல்லாம் போதும் அருளுமையா-நல்லைச்
(சட்......)

அனுபல்லவி

வட்டவரி நுதலாள் மாதுமையை-கரம்
தொட்டணைத்து நித்தம் மகிழ்பவனே-சிவனே
(சட்......)

சரணம்

கெட்டொழியாத் துயரால் வருந்துகின்றேன்-முற்றும்
விட்டொழியாப் பகையால் உழலுகின்றோம்-சற்றும்
கட்டுடையாச் சுமையால் அரற்றுகின்றோம்-நித்தம்
விட்டகலா வினையால் அழுந்துகின்றோம்-சிவனே
(சட்......)

கஷ்டமெல்லாம் தொலைய வடம்தொடுப்போம்-படும்
நஷ்டமெல்லாம் மறையத் தேரிழுப்போம்-வரும்
துஷ்டரெல்லாம் தொலைய வடம்எடுப்போம்-மன
இஷ்டமெல்லாம் நிறையத் தேரிழுப்போம்-சிவனே
(சட்......)

ச. முருகையா

(இன்று அருள்மிகு நல்லூர்சட்டநாதர் சிவன் ஆலயத்தில் தேர்த் திருவிழா)

## பாடசாலைகளுக்கு பரிசுத்திட்டம்

[கோப்பாய்]
பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கான விளையாட்டு முற்றம் அமைக்கின்றமையை ஊக்குவிக்குமுகமாக மாகாணக்கல்வி அமைச்சுசிறந்த விளையாட்டு முற்றங்களை அமைக்கவுள்ள பாடசாலைகட்கு பரிசளிக்கும் திட்டத்தை அறிமுகம் செய்யவுள்ளது.

வலய மட்டத்தில் முதல் ஐந்து இடங்களைப் பெறுகின்ற பாடசாலைகட்கு சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் பொறுப்பான ஆசிரியருக்கும். அதிபருக்கும் விதப்புரைகள் மாகாணக்கல்வி அமைச்சுச் செயலாளரினால் வழங்கப்படும். வலயத்தில் தரமானவிளையாட்டுமுற்றங்களை அதிகமாகக் கொண்ட வலயக்கல்விப் பணிப்பாளருக்கும், உதவிக்கல்விப் பணிப்பாளருக்கும் செயலாளரினால் விதப்புரைகள் வழங்கப்படவுள்ளதாக சுற்று நிருபம்மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-79)

## மரக்கன்றுகள் விதைகள் விநியோகம்

(கல்வியங்காடு)
நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பத்து கிராம சேவகர் பிரிவுகளில் தெரிவுக் குழு மூலம் பட்டினிக்கு எதிரான இயக்கத்தின் ஆதரவுடன் வீட்டுத்தோட்ட விதைகள் மற்றும் மரக்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி-54)

## நெடுந்தீவு பிரதான வீதி டக்ளஸ் எம். பி உதவியுடன் செப்பனிடப்படும்

### பிரதேச சபைத் தலைவர் தகவல்

(நெடுந்தீவு)
நெடுந்தீவு பிரதான வீதி யாழ். எம்.பியும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிப்பொதுச் செயலாளருமான டக்ளஸ் தேவானந்தாவின் உதவியுடன் மிவகுவிரைவில் திருத்தப்படும். அத்துடன் 'தேவா வீதி' என அதற்குப் பெயர் மாற்றம் செய்வதெனமுடிவு செய்யப்பட்டுள்ளது'' என்று நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர் திரு. ஏ.டபிள்யூ அரியநாயகம் நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் அண்மையில் நிறுவப்பட்ட கல்லுடைக்கும் ஆலை ஆரம்பவிழாவில் பேசுகையில் கூறினார்.

மேற்படி சங்கத்தலைவர் திரு.. என். சங்கரப்பிள்ளை தலைமையில் இந்நிகழ்வில் ஆலையை யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். கே. சண்முகநாதன் ஆரம்பித்துவைத்தார்.

இப்பிரதேசத்தின் மேம்பாட்டுக்காகத் தன்னாலியன்ற ஒத்துழைப்பினை வழங்கத் தான் தயாராக இருப்பதாக அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

பனை-தென்னைவள கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். கணேசமூர்த்தி பங்குத்தந்தை எஸ். அந்தோனிப்பிள்ளை திருவாளர்கள் பி. மரியாம்பிள்ளை என். எம். எட்வேட் ஆகியோரும் உரையாற்றினர்.

வரவேற்புரையை திரு. ரி. கணசலிங்கமும் நன்றியுரையை ஆர். தர்மலிங்கமும் நிகழ்த்தினர். (சி-82)

## மருத்துவரின்றி நோயாளர் அவதி

(வேலணை)
வேலணைப் பிரதேச சபையில் வேலணை வங்களாவடியில் நடாத்தப்பட்டு வரும் இலவச ஆயுள்வேத வைத்தியசாலையில் கடந்த இரண்டு மாதங்களாக ஆயுள்வேத வைத்தியர் இல்லாமையால் இவ்வைத்தியசாலையை நம்பி வரும் நோயாளர்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

முன்னர் வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர் யாழ் மாநகரசபைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார் பதில் இடமாற்றம் பெற்றவைத்தியர் இதுவரை இவ் வைத்திய சாலைக்கு கடமைக்குச் சமூகமளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## பயிற்சிநெறி

(அரியாலை)
கிறிஸ்தவ இளைஞர் கழகத்தினால் (வை. எம். சீ. ஏ.) மனையியல் வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பயிற்சிநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும் என்றும் மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் கண்டி வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் தொடர்பு கொள்ளும் படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# தமிழ்இலக்கணத்தின் குருவே வாழ்க

நல்லை நகர் ஆறுமுக நாவலரின் வழித்தோன்றலிலே வாழ்ந்த தமிழ்ப் பெரியோர்கள் யாழ்ப்பாணத்தில் பலராவர். அவர்களின் வரிசையில் இலக்கண முனிவன் மறை திரு. சி. கணேசையருடைய தொல்காப்பிய நல்லுரையின் அருட்கடலிலே மூழ்கி ஐயர் அவர்களினால் 'தேசிகன்' என்று அழைக்கப் பெற்ற நன்முத்துத்தான் எமது விழாவிற்கு நாயகனாக விளங்குகின்ற இலக்கண வித்தகர் சிவத்திரு இ. நமசிவாயதேசிகர் ஆவார்.

தேசிகர் ஐயா அவர்கள் அருங்குணங்களே நிறைந்து மனு நெறியிலே நடந்து அறிவை அறிவால் அறிந்து நிறைவாகிய ஒரு குருவாகவும் தமிழ் மக்களின் அறிவுப் பொக்கிஷமாகவும் தமிழ் மொழியின் சொத்தாகவும் திகழ்கின்றார். எனவே சதாபிஷேக விழாவும் மலர்வெளியீடும் காணவிருக்கும் எமது குரு நமசிவாயதேசிகன் பிறந்திலரேல்

'சொல்லு தமிழ் இலக்கணம் எங்கே
பொருளிலக்கணம் எங்கே'

என்று கேட்டால் அது என்றைக்கும் மிகையாகாது. எனவே இத்தனை சிறப்பும் நிறைந்த எமது பேராசான் நமசிவாயதேசிகர்பாதமதிலே பணிந்து அவர் இன்னும் ஆயிரத்தின் மேல் ஆயிரம் பிறை கண்டு சிறப்புற்று வாழ ஆறு சூடிய சடைமுடியான் அருள் வேண்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

சிவஸ்ரீ சிவ. ஆறுமுகக்குருக்கள்
(அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை)

குடிசெய்வார்க்கு பருவம் மடிசெய்து மானம் கருதக் கெடும்.

- குறள்

# வலம்புரி

## தூரப் பார்ப்போம்

புனரமைப்பு தடல்புடலாய் நடக்கும் பூமி எங்கள் பூமி, தூர்ப்பாக்கியமான தமிழன் புனர்வாழ்வு எடுக்கிறான் காலவெள்ளத்தே. எங்கள் நாட்டிலே செய்யப்படுகின்ற புனரமைப்புத் திட்டங்கள் மேற்குலக நாடுகளின் நிதிவள நீள் கையால் நடைபெறுவன. திட்டமிடப்பட்டு திட்டங்கள் நடை பெறுவதையே மக்கள் விரும்புவர். நீண்ட பார்வை எமக்கு வேண்டும்.

அதிகாரக் கதிரைகளில் அமர்ந்திருப்பவர்கள் மண் பற்றுடையவராதல் வேண்டும். ஏனோ தானோ என்ற போக்கு இம்சித்தும் இருக்கக் கூடாது. மில்லியன் கணக்கில் வருகின்ற நிதிகள் சீராகச் செலவிடப்பட வேண்டும்.

யாழ்.நகர் புராதன வரலாற்றுப் பின்னணி கொண்டது. சுந்தர நகராக்கப்பட வேண்டிய வாய்ப்பு வசதிகள் உடையது. அதனை அழிவு நிலையிலிருந்து மீட்டெடுக்கின்ற போது ஆக்கபூர்வமாக திட்டமிட்டு நகராக்கும் ஆணித்தரமான சிந்தனைகள் கிளர்ந்தெழ வேண்டும். பெருச்சாளிகளாக இருந்து கொண்டு கிள்ள வேண்டியதைக் கிள்ளி வாயிற் போட்டுக் கொண்டால் உண்மையில் தமிழினத்தின் வாயில் மண் போடுகின்றவர்கள் அவர்களே. இவர்களை எதிர்காலம் மன்னிக்காது அன்றியும் அறம் நின்று கொல்லும்.

யாழ். மத்திய பேருந்து நிலையம் பற்றிய வாசகன் ஒருவரின் பேராவலைக் கண்ணுறும் வாய்ப்புக் கிடைத்தது. பரந்து விரிந்த முற்றவெளியில் பக்குவமான முறையில் அது அமைந்தால் என்ன என்பது அன்வர் ஆதங்கமும் அறிவுரையுமாகும்.

இவ்வாறு எடுக்கும் தீர்மானங்கள் திண்ணிதாய் அமையால் பிறர் தமர் பார்க்கும் பேதலிப்பால் நல்லது செய்ய முடியாது தலைமைகள் தவிக்கின்றன. நகரின் நலனுக்கு மக்கள் வசதிக்கு எடுக்கப்படும் எக்காரியத்தையும் காலந் தாழ்த்தாது செய்து முடிக்க வேண்டும்.

பல்வேறு நாடுகளில் பிரதான நகரங்கள் கட்டியெழுப்பியிருக்கும் கட்டமைப்புக்களைப் பரிசீலிக்க வேண்டும். இடிந்து மண்ணோடு மண்ணாய் போன நகரை புனரமைக்கும் போது புதுப்பொலிவுடன் திகழும்.

- அன்புடன் ஆசிரியர்

## நாகபூசணி ஆலய நிகழ்வு

உரும்பிராய் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய மூலஸ்தான நாள் நிகழ்வு விழா அண்மையில் நடைபெற்றது.

இவ் விழாவை தென்னாசிய கலைகள் மற்றும் கலாசார நிலையப் பணிப்பாளர் ந. யோகராஜன் தொடக்கி வைத்தார்.

வலி. கிழக்கு ப.நோ.கூ. சங்கத் தலைவர் லயன் அ.த.க. கிருஷ்ணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (சி)

## இலவச திருமணப்பதிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் எதிர்வரும் 25ம் திகதி டிறிபேக் கல்லூரியில் இலவச திருமணப் பதிவுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

1996ம் ஆண்டிற்கு முன் திருமணம் செய்து இதுவரை பதிவுகளை மேற் கொள்ளாதவர்கள் பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கையாக சாவகச்சேரி இலங்கை வங்கியருகே உள்ள விவாகப்பதிவு அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(சி-21)

## இன்று உடுப்பிட்டி அ. மி. கல்லூரி கட்டடத் தொகுதி திறப்பு விழா

(மந்திகை)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி கட்டடத் தொகுதிதிறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00மணிக்குநடைபெறும்.

கல்லூரி அதிபர் கே,நடராசா தலைமையில்நடைபெறும் இந்நிகழ்வின்போது செயற்பாட்டறைத்தொகுதியை வடமராட்சிவலயக் கல்விப் பணிப்பாளர்சி சிவராசா வும் தாமரைத்தடாகம்,சிலை என்பவற்றை யாழ்ப்பாண வலயமேலதிக பொறியியலாளர்ஜி. சிவபாலனும் திறந்து வைப்பர். தண்ணீர் தாங்கியைகல்லூரியின்முன்னாள் அதிபர்எஸ். தில்லையம்பலம் திறந்து வைப்பர். (சி-23)

## நாளை தீர்த்தத்திருவிழா

(புலோலி)

பருத்தித்துறை மருதடி ஞானவைரவர் தேவஸ்தான தீர்த்தத்திருவிழா நாளை 20 ஆம் திகதி திங்கட் கிழமை நடைபெறுகின்றது

இந்த ஆலய அலங்கார உற்சவம் கடந்த 6 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

21 ஆம் திகதி வைரவர் சாந்தியும், 22 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறுமென ஆலயதர்மகர்த்தா இ. பொன்னம்பலக் குருக்கள் அறிவித்துள்ளார். (சி-52)

## கோரிக்கை

(அரியாலை)

நல்லூர் சிவன் ஆலய கொட்டகை வேலைகளுக்கு ஒரு தொகுதி கூரைத்தகடுகள் தேவைப்படுகிறது. என்றும் இத்திருப்பணிக்கு அடியார்களின் உதவியை தேவஸ்தான சபையினர் நாடுகின்றனர். என்றும் தெரிவிக்கப் படுகிறது. (சி)

## மகளிர்தின விழா

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்தினர் சர்வதேச மகளீர் தினத்தை சிறப்புறக் கொண்டாடினர்.

சங்கமகளீர் குழுத்தலைவி பண்டிதை வ.பத்தினிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (சி)

## சந்திப்பு

(கல்வியங்காடு)

அறவழி மழலைக் கல்விப் பூங்காக்களில் கல்விகற்கும் மழலைகளின் பெற்றோர்-பூங்கா வளர்ச்சிக் குழுத் தலைவர்கள் சந்திப்புகள் வலயமட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை வலிகாமத்திலும் 26 ஆம் திகதி வடமராட்சியிலும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி-54)

## சரண கமலம் தந்திடுவாய்

வண்ணார் பண்ணையின் வைத்தீசா!
வாலாம் பிகையாள் மணவாளா!
வெண்ணெய்க் கண்ணனின் மைத்துனனே
வேதமும் காணரும் தத்துவனே!
பண்ணார் தமிழிற் கனிவோனே!
பத்தர்கண் ணீரில் நனைபவனே!
சண்முகன் தாதாய்! வந்திடுவாய்!
சரண கமலம் தந்திடுவாய்!

சொக்கன்.

# இயல்புத் தமிழ்க்கல்விப் பாரம்பரியத்தில் முழுமை பெற்றவர் நமசிவாயதேசிகர்

(பேராசான், இலக்கணவித்தகர் இ. நமசிவாயதேசிகர் அவர்களின் சதாபிஷேகப் பெருவிழா இன்று நல்லூரில் கொண்டாடப்படுவதனை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது. (ஆ-ர்))

பண்டிதர் மு. கந்தையா

உடல்வேறு தான்வேறு என்று பிரித்துணரும் அளவுக்கில்லாமல் உடலோடு அத்துவிதப்பட்டுள்ள ஆன்மாவே வாழ்வின் முக்கிய பொருள். அது பெறும் ஞானப் பேறே வாழ்வின் முக்கிய பயன். அவ் ஆன்மா தன்னியல்பிலேயே அறிவுமயமானது. உயிர் எத்தன்மைத் தெனில் உணருந் தன்மைத்து எனல் செவ்வ நிறை (செப்பமான நேர் விடை)என்ற சேனாவரையர் கூற்று இதற்குச் சான்று. இவ் உணர்வாற்றலை மனிதன் வளர்க்குமாற்றல் வளர்த்தெடுத்து உண்மை ஞானப் பேறாகிய விளைவை எய்தியாக வேண்டும் என்பதே இயல்புநிலையிலான தமிழ்க் கல்வியின் நோக்கும் போக்கும் இதற்கு முற்றிலும் அனுசரணையாகவே பாரம்பரியத் தமிழ்க் கல்வி நெறிப்படுத்தப் பட்டு வந்துள்ளதும் உண்டு.

எழுத்தறிவு பெற்ற ஒருவன் சிற்றிலக்கியங்களைக் கற்று அதன் மேல் தமிழிலக்கணத்தை வரன் முறையாகக்கற்று மொழித்திறன் வாய்க்கப் பெறவேண்டும். அதாவது மொழியைப் பிரயோகித்தல் சார்பிலான சரி பிழைகளைத் தானாகவே நிச்சயிக்கும் ஆற்றல் பெறவேண்டும். அதன் மேற் பிரபந்தங்கள் காவியங்களாகிய பேரிலக்கியங்களை ஐபந்திரிபறக் கற்றாக வேண்டும். அதனால் உலகியலை உள்ளவாறு உணரும் ஆற்றல் விளையும். அதன் மூலம் நிலைப் பொருள் நிலையாப் பொருள்களைப் பகுத்தறியும் விவேகம் உளதாகும். இவ் விவேகம் நிலையாப் பொருள்களை இனங்கண்டு விலக்கி நிலைப் பொருாகளை இனங் கண்டு தழுவும் ஆவலை விளைவிக்கும் அந்த ஆவல் ஞான நூற் கல்வி கேள்விகளில் அவனை ஈடுபடுத்தியே தீரும். மேல் அவனுக்கு ஞானப் பேறும் அதன் விளைவும். சொல்ல வேண்டாம்.

நாவலர் பெருமான் சுமார் ஒன்றே கால் நூற்றாண்டுக்கு முன் 'தமிழ்ப் புலமை' என்ற பெயரில் பட்டியலிட்டுக் காட்டியிருக்கும் தமிழ்க் கல்விப் பாடத்திட்டம் காட்டுவதும் இதனையே தான்.

நாவலர் வழிவழி ஈழத்தமிழ் நிலத்தில் வித்துவான், பண்டிதர், புலவர் என்ற பெயர்களில் விளங்கியவர்கள். அனைவரும் இதே இயல்பு தமிழ்க்கல்விப் பாரம்பரியத்தில் நின்றவர்களே. இவர்களுள் நம்மனோர் நன்றாகணுகிக் கண்டறியும் படியாக விளங்கியவர் வித்துவான் கணேசையர். தமிழ் நூலாராய்ச்சியில் ஆற்றிய சேவைகள் மகத்தானவை, அவை அனைத்திலும் மகத்தானது. யாதெனில் மேற்காட்டிய இயல்பு தமிழ்க் கல்வியின் நிறைகுடமாக அவர் தழங்கித் திகழ்ந்த அறிவியற் சோலை ஆகும்.

அதிர்ஷ்ட வசத்தால் கணேசையரின் தலைமை மாணவனாய் ஆதியோடந்தமாக இயல்பு தமிழ்ப் பாரம்பரியக் கல்வியில் முழுமை பெற்றவர் பண்டிதர்நமச்சிவாயதேசிகர் அறிவாராய்ச்சித் திறத்தில் மட்டுமன்றி தமிழ்க்கல்வி தமிழுக்காக அதாவது தமிழறிஞனாய் இருப்பதற்காக என்ற கோட்பாட்டில் சரிசுத்த ஐயரைப் போலவே இருந்தவர் இவர். விளம்பர நோக்கத்தோடு கூடிய ஆடம்பர பிரச்சாரத் தனங்களில் அவரும் பற்றற்றிருந்த நிலை இவரும் பற்றுற்றிருந்த நிலை ஆய்ந்தறிந் தடங்கிய சான்றோர் அவரெனில் இவரும் அதுவே.

வெய்யிலில் இளைத்து ஆறுதல் தேடி வந்தவனுக்கு எந்த வித எதிர்பார்ப்புமின்றி நிழல் வழங்குவது விருட்சத்தின் இயல்பு அவ்வாறே. தமிழ் இலக்கண இலக்கிய விஷயங்களில் அறிவுத் தாகமுற்று வந்தணைவோருக்கும் அவர் தேவை நிரம்ப விளக்கந் தந்தனுப்புவார் தேசிகர். பாடசாலை நேரந் தவிர்ந்த மற்றெந்தநேரமும் லௌகிகபரமான வெளிப் பிராக்குகளிற் செலவிடாது கற்கவோ ஐயந் தீர்க்கவோ வருவோர்க்கெனவே அவர் ஒதுக்கியிருந்தமை கண்கூடு.

இதனால் அவர் வாசஸ்தானமாகிய கட்டுவன் சைவ மடத்தடிப்பகுதி சதா தமிழ் கற்கும் ஆசிரிய மாணவர்களின் சஞ்சாரம் மிகுந்த பிரதேசமாயிருந்தமைபிரசித்தம். பாடசாலைகள் அரசாங்க உடமைகளாக முன் பாடசாலைகளில் உயர் வகுப்புகளில் தமிழ் கற்பிப்போருக்குப் பாலபண்டித, பண்டிதத் தகைமை கட்டாய விதியாயிருந்ததுண்டு. அது காரணமாக அக்காலத்து உயர் வகுப்புகளிற் கற்பிக்கும் தமிழாசிரியர்கள் பாலபண்டித, பண்டிதத் தகைமை பெற வேண்டிக் கட்டுவன் சந்தியை வட்டமிட்டுக் கொண்டே இருப்பார். இது தேசிகரின் இயல்பு தமிழ்க் கல்விப் பாரம்பரிய சேவையின் பொற்காலம் எனலாம்.

## மாண்புறு மாணவரைத் தந்த வள்ளலே வாழி வாழி

இலக்கணமும் இலக்கியமும் ஏற்றம் எய்த
எண்ணரிய சேவைகள் செய் திட்ட தாலே
துலக்கமதாய் எடுக்குமிந்த விழாவைக் கண்டு
தொண்டுள்ளம் சிறக்கவென்றே தொழுது நிற்போம்
கலக்கமுறும் தமிழன்னை மகிழு மாறே
காலமெலாம் உழைத்தவரைக் கற்கண் டென்போம்
சொலவரிய அன்பறங்கள் தொடர்ந்து காக்கும்
தொண்டுள்ளம் பல்லாண்டு வாழி வாழி
நலங்குலவு பரீட்சகராய் அமைந்து மேலாம்
நற்தொண்டு செய்யுமகா வித்வானென்னும்
இலங்கு நய வாசகத்தால் இயம்ப லானோம்
எண்ணரிய சேவைதனைச் செய்த தாலே
வலங்குலவு தம்மாண்பு சிறக்க இந்த
வையத்தில் மாணவரைத் தந்த நீங்கள்
இலங்குகம லாம்பிகையால் தேவி யோடும்
இவ்வுலகில் நலம் பொலிந்து வாழி வாழி

ஆக்கம்: பண்டிதர்
ம. ந. கடம்பேசுவரன்

(இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர் அவர்களின் சதாபிடேக விழாவை முன்னிட்டு இப் பாடல் இடம் பெறுகிறது)

# ஆளுமைமிக்க ஆசிரியரை அதிபராக பயிற்றுவிக்க அமைச்சு புதிய திட்டம்

(கொழும்பு)

கல்வி, உயர் கல்வி அமைச்சு நாட்டிலுள்ளதிறன்கொண்ட ஆளுமைமிகு ஆசிரியர்களை அதிபர்களாகப் பயிற்று விக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் பணிப்பிற்கமைய கல்வியமைச்சர் றிச்சேட் பத்திரன இது தொடர்பாக அறிவித்தல் ஒன்றையும் விடுத்துள்ளார்.

அமைச்சின்மேலதிகச் செயலாளர் உபசேன சேனநாயக்கா வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இது தொடர்பாக அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் பிரத்தியேகத்திறன் கொண்ட ஆசிரியர்களை எதிர்காலத்தில் அதிபர்களாகப் பயிற்றுவிக்க இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதற்கென ஒரு வலயத்திலிருந்து மூவர் தெரிவு செய்யப்படுவர் இவர்களில் இருவர் ஆசிரியராகவும் ஒருவர் ஆசிரியையாக இருக்க வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள முன்னணி பாடசாலைகளில் கற்பிக்கும் ஆளுமைமிக்க ஆசிரியர்களே இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## 2002-ம்ஆண்டுமுதல்உயர்தரப்பரீட்சை ஏப்ரலில் நிகழும் பல்கலைக்கு மாணவர் தெரிவாகும் முறையிலும் மாற்றம் வரும்

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்களைத்தெரிவு செய்வது தொடர்பான தற்போதைய முறையை மாற்றியமைக்கவும் 2002 ஆம் ஆண்டு முதல் க.பொ.த.உ.பரீட்சையை ஏப்ரல் மாதத்தில் நடத்தவும் திட்டமிட்டுள்ளதாக கல்வி, உயர் கல்வியமைச்சின் புதிய செயலாளரான பேராசிரியர் ஆர்.பி. குணவர்தன அறிவித்துள்ளார்.

பரீட்சை முடிந்து பெறுபேறுகள் வெளியாகும் வரையும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் வரையும் மாணவர்கள் நீண்டகாலம் வீணாகக் காத்திருக்க வேண்டியிருப்பதை மாற்றுவதற்காகவே க.பொ.த உயர்தரப் பரீட்சை நடத்தப்படும் காலத்தை மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளதாக, அவர் குறிப்பிடுகிறார்.

இதற்கான கால அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டு பரீட்சைகள் நடைபெற வேண்டிய காலம் பெறுபேறுகள் வெளியாக வேண்டிய காலம் என உறுதிப் படுத்தப் படவுள்ளன. பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களைத் தெரிவு செய்கையில் சிறு பகுதியினருக்கே சலுகை வழங்கப்படுகிறது. இதனால் கூடுதலான மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. இதனை மாற்றியாக வேண்டும்.

கல்வி தொடர்பான ஜனாதிபதி செயலணிக் குழு இது குறித்து கவனம் செலுத்தி வருகிறது என்றும் திரு. குணவர்தன தெரிவித்தார். (சி)

## புயல்ஹமீட் காலமானார்

(கொழும்பு)

உள்ளூராட்சிமாகாண சபைகள் அமைச்சர் அலவி மௌலானாவின் ஊடக இணைப்பாளர் முகமட் சாகுல் ஹமீட் (புயல் ஹமீட்) மாரடைப்பால் நேற்று முன்தினம் காலமானார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அன்னாரின் ஜனசா நல்லடக்கம் இன்று நடைபெறும். (வ)

### பிணையில்---

செய்யும் சட்டத்தை நீதி அமைச்சு முற்றாக மாற்றியமைப்பதற்கு ஆலோசித்து வருகிறது.

1987ம் ஆண்டின் 30ஆம் இலக்க சட்டத்தின் மூலம் பயங்கரவாத, அவசர கால சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுபவர்களை சட்டமா அதிபரின் அனுமதியுடன் பிணையில் விடுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருந்தன.

இச்சட்டம் முற்றாகமாற்றியமைக்கப்பட்டால் பயங்கரவாத, அவசரகாலத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களை மாதக்கணக்கிலோ அல்லது வருடக்கணக்கிலோ விளக்கமறியலில் வைக்க முடியுமென்று சட்ட வல்லுநர் கருத்துத் தெரிவித்தள்ளார்.

இதேவேளை இச்சட்ட மாற்றத்தினால் தமிழ்க்கைதிகளே பெருமளவில் பாதிப்படைவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

### ஏழாலை---

வதற்காக புகையிரதம்மூலம் கொழும்புசென்ற வேளையே காணாமல் போய்விட்டதாக தெரியவருகின்றது.

இவர் யாழ்ப்பாணம் ஏழாலை மயிலங்காட்டைச் சேர்ந்தவர் என்றும் தற்போது வவுனியாவில் வசிந்து வந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் காணாமல் போனது தொடர்பாக ஐ.சி,ஆர்.சி, வவுனியா மனித உரிமை ஆணைக்குழு, தொல்லை தவிர்ப்புக்குழு ஆகியவற்றில் முறையிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### வழக்கறிஞர்.--

கப்பட்டது. இறுதியாக புகலிடம் கோரி விண்ணப்பம் செய்திருந்த என்னை விசாரணைக்கு வருமாறு ஜேர்மன் அரசு அழைத்திருந்தது. அந்த விசாரணைக்கு சென்றபோது வீதியில் வைத்து கைது செய்த ஜேர்மன் பொலிசார் என்னை கடந்த திங்கட்கிழமை சிறையில் வைத்திருந்து விட்டு புதன்கிழமை இலங்கைக்கு திருப்பி அனுப்பினார்கள்,

கடந்த வியாழக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய என்னை சி.ஐ.டி பொலிசார் அழைத்துச் சென்று தீவிர விசாரணையின் பின் மாலை விடுவித்தனர். (வ—

### உலக---

மேலும் 3லொறிகளில் உணவுப் பொருட்களை அனுப்ப அனுமதிப்பதாகவும் இணக்கம் காணப்பட்டதாக தெரியவருகிறது.

வன்னி மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் அவற்றினை தீர்க்கும் வழிவகைகள் குறித்து நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் வவுனியா அரச அதிபர் கே. கணேஷ். கிளிநொச்சி அரசஅதிபர் ரி. ஐயாத்துரை, முல்லைத்தீவு அரசஅதிபர் எஸ். சுந்தரம், பிரிகேடியர் சுனில் தென்னக்கோன், பிரிகேடியர் பிஸகேம பிரிகேடியர் காமினிஜெயசுந்தரஆகியோர் கலந்துகொண்டனர்.

### யாழ்:மேல்---

மைப் பொறுப்பினை ஏற்றுக் கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை மல்லாகம் மாவட்ட நீதிபதியாக பா.சுப்பிரமணியம் நியமிக்கப்கட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மல்லாகம் மாவட்ட நீதிமன்றங்கள் தொடர்ந்து தினமும் இயங்கக் கூடியதாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

### துப்பாக்கி---

ஜெயந்த (வயது 24) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு காயமடைந்து யாழ். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபின் மேலதிக சிகிச்சைக்காக பலாலி இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (7-ந)

### தற்கொலைத்---

பணித்ததுடன் அடையாள அட்டையைக் காட்டுமாறும் கேட்டனர்.

பொலிஸாரின் கெடுபிடியினால் மிரண்ட யுவதி சுரிதாரைக் கழற்றியதுடன் தம்மிடம் அடையாள அட்டை இல்லை எனவும் தெரிவித்தார்.

அவரை உடனடியாகக் கைது செய்து பொலிஸார் விசாரித்போது அவர் ஓர் சிங்கள யுவதிஎனவும் அவரின் பெயர் டபிள்யூ.பி. சிறியலதா எனவும் தெரியவந்தது.

இச்சம்பவத்தை அறிந்த கொழும்புமாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் சுரிதாரைக் கழற்றிவித்தமை பற்றியும், அப்பெண் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளமை பற்றியும் பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனியாவின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். (வ)

### வடக்கின்---

143 ஓட்டங்களைப் பெற்றது. மத்திய கல்லூரி அணி 9 விக்கெட் இழப்புக்கு 224 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றஜீவ் 46 ஓட்டங்களைப்பெற்றார்.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸை நேற்று ஆரம்பித்த பரியோவான் அணி ஆட்ட முடிவில் 265 ஓட்டங்களிற்கு 6 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

இவ் ஆட்டத்தின் நாயகனாக யாழ்.மத்திய கல்லூரியைச் சேர்ந்த றஜீவ் தெரிவானார். (ச-33)

## முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெயரில் வடக்கு-கிழக்கில் புதிய கட்சி

### மாநில சுயாட்சியை கோருகிறது

(கல்முனை)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அதிகாரப் பரவலாக்கல் வடக்குக் கிழக்கு இணைந்த மாநில சுயாட்சியாகவே அமைய வேண்டும் என வடக்குக் கிழக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எல். எம். ஹாரிஸ் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் புதிதாக அமைக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மாநாடு நேற்று மட்டக்களப்பு கத்தோலிக்க மண்டபத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமது கட்சியை விரைவில் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப் போவதாகவும் பதிவு செய்ய மறுத்தால், எதிர்வரும் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயேட்சையாகப் போட்டியிடப் போவதாகவும் அவர் மேலும் அங்கு தெரிவித்தார்.

இம்மாநாட்டில், வடக்குக் கிழக்கிலுள்ள ஒவ்வொரு இனத்திற்கும் அதிகாரப் பரவலாக்கல் அலகு யோசனையை கைவிடவேண்டும் என்ற கோரிக்கை உட்பட ஆறு அம்சக் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதென முடிவெடுக்கப்பட்டது. (ந)

## பொன்னணிகள் மோதல் பத்திரிசியார் அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பொன்னணிகள் எனப்படும் பத்திரிசியார் கல்லூரி அணியினதும் யாழ்ப்பாணக் கல்லூரி அணியினதும் கிறிக்கெட் போட்டியில் பத்திரிசியார் கல்லூரி அணி இன்னிங்சால் வெற்றியீட்டியது.

இவ்வாட்டத்தின் நாயகனாக பத்திரிசியார் அணியைச் சேர்ந்த அருள் ராஜ் தெரிவானார்.

## மட்டுவில் மோதல் சம்பவம்: படைத்தரப்பு விடுக்கும் அறிக்கை

(யாழ்பாணம்)

மட்டுவில் பகுதியில் கடந்த 17ஆம்திகதி மாலை 4மணியளவில் நிகழ்ந்த மோதல் சம்பவம் குறித்து பலாலி பாதுகாப்புத்தலைமையகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2000-03-17ம் திகதி மாலை 4மணியளவில் மட்டுவில் டீதீஸ் விளையாட்டு மைதானத்திற்கு அருகில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு படையினர் மீது எல்.ரி.ரி.ஈ. இயக்க உறுப்பினர்கள் கைக்குண்டு தாக்குதலை நடத்தியுள்ளார்கள். இந்த சம்பவத்தின் போது வீதியில் பயணம் செய்துகொண்டிருந்த சாவகச்சேரி மட்டுவில் வடக்கு என்ற முகவரியில் வசிக்கும் 16வயதுடைய சிவானந்தன் தயானந்தன் என்றமாணவனும் மட்டுவில் வடக்கு சிவன் கோவிலடியைச் சேர்ந்த 16 வயதுடைய மார்க்கண்டு கண்ணகைபவன் என்றமாணவனும், 70வயதுடைய தம்பிமுத்து அன்னமுத்து என்ற முதியவரும் மேலும் மூன்று படையினரும் காயமடைந்துள்ளார்கள்.

ஆனால் புலிகள் கைக்குண்டை எறிந்துவிட்டு தப்பிச்செல்ல முயன்றபோது படையினர் பதில் தாக்குதலை நடத்தி கைக்குண்டு எறிந்த இரு இயக்க உறுப்பினர்களையும் சுட்டுக்கொன்றுள்ளார்கள். கொல்லப்பட்ட சடலத்தையும் இரண்டு சயனைட் குப்பிகள் மூன்று கைக்குண்டுகள் இயக்க உறுப்பினர்களை அடையாளம் காண்பதற்கு உதவும் இலக்கத்தகடு (கு0017) ஒன்று என்பவற்றையும் படையினர் கைப்பற்றியுள்ளனர். கொல்லப்பட்ட இயக்க உறுப்பினர்கள் இருவரும் சசி மற்றும்சின்னவன்என அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். அதேவேளைஇந்த சந்தர்ப்பத்தில் காயமடைந்த வயோதிபர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும் மாணவர்கள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையிலும் படையினரால் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை தனங்களப்பு வீதியில் சுமார் ஒன்றரைக் கிலோமீ. தூரத்தில்நெல் அறுவடைக்கு சென்ற தொழிலாளியான 47 வயதுடைய கனகரத்தினம் மதியாபரணம் என்பவர் புலிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாகியுள்ளார். அவர் கொடிகாமம் சந்தை வீதியை வசிப்பிடமாக கொண்ட கூலித் தொழிலாளியாவார். (சி)

## இன்று ஸ்நபன அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீசெந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோவில் ஸ்நபன அபிசேகமும் விசேட பூசையும் இன்று நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படும். (ந)

### திருப்பி---

டுள்ளார்.

புளொட் அமைப்பின் தலைவரும் வன்னி மாவட்ட எம்.பியுமான த. சித்தார்த்தன் ஜேர்மன் அரசிடம் விடுத்த வேண்டுகோளில் ஜேர்மனியில் அரசியல்தஞ்சம் கோரிய ஈழத்தமிழ் அகதிகளை திருப்பியனுப்பும் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும். எனக் கேட்டுள்ளார்.

வன்னி மாவட்ட எம்.பியும் தமிழீழ விடுதலை இயக்க முதல்வருமான செல்வம் அடைக்கலநாதன், ஈழத்தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதென்பது மனிதாபிமான மற்ற ஒரு செயலாகும்.

எனவே திருப்பியனுப்புவது என்ற தனது நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று ஜேர்மன் அரசிடம் கோரியுள்ளார். இதேவேளை ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இலங்கைக்கான ஜேர்மன் துதரை சந்தித்து பேச்சு நடாத்த உள்ளதாகவும் ஜேர்மனிலுள்ள ஜேர்மன் அதிபருக்கு ஈழத்தமிழ் அகதிகளை திருப்பியனுப்பக் கூடிய சூழ்நிலை இதுவல்ல என்று கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ-ச)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல, 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலசாத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.